# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22:20

*காலேப் யோசுவா*
Cell :9444701953

*பிளாட் எண். 4, 2வது தெரு, மணலி சரவணா நகர், மாங்காடு, சென்னை - 600 122.*

## *லவோதிக்கேயா சபை (ஏழாம் சபை / கடைசி சபை) கால தூதனுடைய செய்தியை கறைப்படுத்தும் வஞ்சக ஆவி.*

1. கிறிஸ்துவின் சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், அவருடைய சரீரமாகிய சபையானது பக்திவிருத்தியடைவதற்காகவும், கர்த்தரால் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய காலேப் யோசுவா, தேவன் தம்முடைய சுய இரத்தினாலே சம்பாதித்துக்கொண்ட அவரது அந்த காணக்கூடாத சரீரமாகிய சபையில் அவயவங்களாக உள்ள, தாங்கள் கிறிஸ்துவின் மணவாட்டி என பெருமைபாராட்டிக் கொள்பவர்களுக்கு எழுதுகிறதாவது : மனுஷர்களுடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளை போல அடிப்பட்டு அலைகிறவர்களாயிருக்கிற உங்களை கிறிஸ்து இயேசுவுக்குள் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன் தாமே தம்முடைய வார்த்தையில் உங்களை சீர்ப்படுத்தி ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவாராக. அவருக்கு மகிமையும், வல்லமையும், சதாகாலங்களிலும் உண்டாவதாக. ஆமென்.

**2. வஞ்சிப்பு என்பது என்ன? ஒருவன் நம்முடையவன் போல நம்முடன் பழகுவான், புசிப்பான், குடிப்பான், தூங்குவான். ஆனாலும் அவன் நம்முடன் கூட இருந்துக்கொண்டே நமக்கு குழிவெட்டுகிறவனாக இருப்பான். ஆனால் தேவனுடைய வித்தை / தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை வஞ்சிக்கமுடியாது. தேவனால் தெரிந்துக்கொள்ளப்படாதவர்கள் அவனால் வஞ்சிக்கப்படுவார்கள். அது தான் வஞ்சகம். நாம் வாழும் சபைக்காலம் மிக்க கொடிதான வஞ்சிப்பின் காலம். இக்காலத்தில் சத்தியமும், அசத்தியமும் ஒன்றுக்கொன்று மிக்க நெருக்கமாக இருந்து, அசத்தியத்தை சத்தியமாக எண்ணி மக்கள் வஞ்சிக்கப்படுவார்கள். பாருங்கள் கடைசிகால செய்தி, செய்தி, தீர்க்கதரிசி, தீர்க்கதரிசி எனகூறிக்கொண்டே, ஏதோ ஒரு பெரிய ஊழியம் செய்கிறது போல தங்களை காட்டிக்கொண்டு, ஏமாந்து உதவிசெய்கிறவர்களுடைய பொருளாதாரத்தை அனுபவித்துக்கொண்டு, தவறான போதனைகளை புகுத்தி மக்களை ஏமாற்றும் கூட்டம் நம் மத்தியில் பரவலாக எங்கும் காணப்படுகிறது. இந்த கூட்டத்தை மனக்கண் திறக்கப்பட்டவர்கள், பகுத்தறியும் ஆவியை உடையவர்கள் மட்டும் தான் அடையாளம் கண்டுக்கொள்ள முடியும். மற்றவர்கள் ஏமாந்து போவார்கள் / வஞ்சிக்கப்படுவார்கள்.**

3. **வஞ்சிப்பு, இந்த கடைசி நாட்களுக்குரிய ஒரு அடையாளம். அது நாம் கடைசி நாட்களில் இருக்கிறோம் என நம்மை எச்சரிக்கிறது.** இதுகுறித்து நான் பலமுறை உங்களுக்கு எழுதியுள்ளேன். ஆனாலும் மீண்டும் உங்களுக்கு சில அறிவுரைகளை எழுத விரும்புகிறேன். சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்தது போல, உங்கள் மனதும் இக்காலத்திற்குரிய, லவோதிக்கேயா சபைக்கடுத்த செய்தியை பற்றிய உண்மைகளிலிருந்து விலகும்படி, இந்நாட்களில் **விலாசம் இல்லாத மணவாட்டி ஊழியம்** மற்றும் விலாசம் கொண்ட சென்னை, சூளைமேடு, **இயேசு கிறிஸ்துவின் ஜெபவீடு** உங்களை கெடுத்துவிடக்கூடாது, மோசம் போக்கிட கூடாது என உங்களை எச்சரிப்பதை எனது இந்த நேரத்திற்குரிய பணியாகக்கொண்டு இதை எழுதுகிறேன். சூளைமேடு சபை பாஸ்டர் குறித்து நான் உங்களுக்கு எழுதியுள்ளேன். அவர் ஒரு அருமையான, நற்பண்புள்ள சகோதரன். ஆனால் அவர் சாத்தானின் வலையில் விழுந்துவிட்டார். அவன் அவரை தன் பக்கம் இழுத்துக்கொண்டான். **மணவாட்டி ஊழியம்** சகோ. ஜீவஜெயத்தை ஒரு முறை கோடம்பாக்கத்தில் வில்லியம் பிரன்காம் குட் நியூஸ் சொசைட்டியில் சந்தித்தேன். ஒருவரை ஒருவர் அறிமுகப்படுத்திக்கொண்டோம் . நான் யார் என்பதை அறிந்தவுடன், அவருடன் கூட வந்த சகோதரன், அவரிடம் மீசை இல்லாவிட்டாலும் என்னை பார்த்து முறுக்கினார். ஆனால் உடனே சகோ. ஜீவஜெயம், தன் நண்பனை கடிந்து கொண்டார். இதிலிருந்து அவர் ஒரு நல்லபண்புள்ள சகோதரன் என அறிந்துக்கொண்டேன். அந்நாட்களில் அவர் இக்காலத்திற்குரிய செய்திகளை ஆங்கிலத்திலும் தமிழிலும் சி.டி.களில் தொகுத்து விசுவாசிகளுக்கு இலவசமாக கொடுத்துக்கொண்டு வந்தார். ஒரு நல்ல பணியை செய்துக்கொண்டுவந்தார். நானும் அவரது ஊழியத்தை வரவேற்று அவரிடமிருந்து பல சி.டி.களை பெற்று அதை எனக்கு அறிமுகமானவர்களுக்கு கொடுத்து உதவினேன். அவர் என்று **மணவாட்டி ஊழியம் வெளி 22 : 17** என குறிப்பிட்டு, ஆங்கில செய்திகளை தமிழில் மொழிப்பெயர்த்து வெளியிட ஆரம்பித்தாரோ, அன்று முதல் திசைமாறி சென்றுவிட்டார். சாத்தான் அவரைத் தன் பாதையில் திசைமாறச்செய்து அவரை தன் பக்கம் கவர்சித்துக்கொண்டான். இவரைப்போன்று தான் என்று சூளை பாஸ்டர் கேட்க தகாதவர்களுடைய பேச்சை கேட்டாரோ அன்று முதல் தன் பாதையில் தவறிவிட்டார். என்று இருவரையும் வஞ்சிக்கிற ஆவி

மேற்கொண்டதோ, அன்று முதல் தங்கள் ஸ்தானத்தை மறந்தார்கள். தேவசித்தத்திற்கு புறம்பாக தங்கள் ஸ்தானத்திற்கடுத்ததல்லாத பணிகளில் ஈடபட ஆரம்பித்தனர். அது அவர்களை தேவனுடைய ராஜ்யத்தியத்திற்கு புறம்பாக்கியது, அது அவர்களை சார்ந்தவர்களையும் தேவனுடைய ராஜ்யத்திற்கு புறம்பாக்கியது. ஆதலால் இவர்களை பின்பற்றுகிறவர்கள், இந்த நிருபத்தின் வாயிலாக தெளிவடைந்து, உங்களை சுதாரித்துக்கொள்ளுங்கள்.

4. பாருங்கள் தேவன், சத்தியத்தை விசுவாசியாமல், அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாக கொடிய வஞ்சகத்தை அவர்களுக்கு அனுப்புகிறார் (2தெச 2 : 11, 12) பாருங்கள் தேவன் யாருக்குள் கொடிய வஞ்சகத்தை அனுப்புகிறார்? சத்தியத்தை அறிந்தும், அநீதியில் பிரியப்படுகிறவர்களுக்குள். இவர்கள் தேவன் சகோ. பிரன்காமுக்கு கொடுத்த ஸ்தானத்தைவிட (ஏழாம் சபைக்கால தூதன் மற்றும் தீர்க்கதரிசி) அவரை உயர்த்தி உயர்த்தி, தேவனுக்கு ஒப்பாகவும், அவருக்கும் சமமாக கொண்டுபோவதால் தேவனே கொடிய வஞ்சகத்தை அவர்களுக்குள் அனுப்பியுள்ளார். ஆதலால் எனக்கு பிரியமானவர்களே அன்று ஏவாளை வஞ்சித்த சர்ப்பம், இன்று உங்களையும் மோசம் போக்காதபடிக்கு **மணவாட்டி ஊழியம் மற்றும் இயேசு கிறிஸ்துவின் ஜெபவீடு** ஊழியங்களில் / சபைகளில் பங்குக்கொள்ளாதீர்கள். அவர்களை பின்பற்றாதீர்கள். இவர்களை ஆட்கொண்ட வஞ்சிக்கிற ஆவிக்கும், இவர்களை மோசம் போக்கும் பிசாசின் உபதேசங்களுக்கும் நீங்கள் செவிக்கொடுத்து, பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்தை விட்டு விலகி மோசம் போகாதீர்கள் என கர்த்தருக்கு முன்பாக உங்களை எச்சரித்து,புத்தி சொல்லுகிறேன். இவர்களிடம் தேனுடைய வார்த்தைக்கும் இக்காலத்திற்குரிய செய்திக்கும் விரோதமான மிறுதல்கள் பெறுகி, சீர்கேடுகள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. புத்திமதிகளை ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்கிறார்கள். தங்கள் முகங்களை கன்மலையை பார்க்கிலும் கெட்டியாக்கி, திரும்பமாட்டோம் என்கிறார்கள். சத்தியத்திற்கு தங்கள் செவிகளை சாய்க்காமல் தங்கள் பொல்லாத இருதயத்தின் யோசனையின்படியும், கடினத்தின்படியும் நடந்து, முன்னிட்டு அல்ல, பின்னிட்டே செல்கிறார்கள். முடிவாக சத்திய ஆவி, வஞ்சிக்கிற ஆவி இன்னதென்று அறியும் அறிவை கர்த்தர் உங்களுக்கு பரிசுத்த ஆவியின் வல்லமையினால் கொடுப்பாராக. இயேசு : ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்கிறார்.

5. தேவனுடைய செயலை கவனித்து பார், அவர் கோணலாக்கியதை நேர்மையாக்கத்தக்கவன் யார்? பிர 7 : 13. பாருங்கள் தேவன், இடறுகிறதற்கென்றே நியமிக்கப்பட்ட ஒருவனை, யாராலும் தேவனுடைய வார்த்தையை விசுவாசிப்பதற்கு, நித்திய ஜீவனை பெறுவதற்கு அவனை வழிநடத்துமுடியாது. ஆதலால் தான் வெளி 8 : 1, 10 : 1, அப் 1 : 9-11 க்கு அடுத்த விளக்கங்களை எவ்வளவுதான் வேதவாக்கியங்களை கொண்டும் இக்காலத்திற்குரிய செய்தியைக்கொண்டும் விவரித்து விளக்கி, வியாக்கியானம் செய்து காண்பித்தாலும் சென்னை, சூளைமேடு, இயேசு கிறிஸ்துவின் ஜெபவீட்டார் மற்றும் அதனுடைய வகையறாக்கள் விசுவாசிக்கமாட்டார்கள். (அப் 13 : 41) ஏனென்றால் அவர்கள் தேவனுடைய வாத்தையை ஏற்றுகொள்ளாமல், இக்காலத்திற்குரிய செய்திக்கு தங்கள் சொந்த விளக்கம் / வியாக்கியானம் கொடுத்துக்கொண்டு செல்வதால், அவர்கள் கேட்கும் வசனங்கள் / விளக்கங்கள் அவர்களுக்கு பிரயோஜனப்படவில்லை. எபி 4 : 2 ஆதலால் தான் அவர்கள் மேற்கூறிய வெளி 8 : 1, 10 : 1, அப் 1:9-11 வசனங்களின் கருத்தை அவர்களால் அறிந்து/புரிந்துக்கொள்ள முடியவில்லை. அது அவர்களுக்கு தோன்றாமல் மறைபொருளாயிருக்கிறது (லூக் 9 : 44, 45, 18 : 31-34) ஆம், இவர்கள் தங்கள் இருதயத்தில் உணர்ந்து, குணப்படாமல் இருக்கும்படிக்கும், தேவன் இவர்கள் ஆரோக்கியமாக்காமலிருக்கும்படிக்கும், இவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது. ஆதலால் தங்கள் காதுகளால் மந்தமாய் கேட்டு, தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள் (அப் 28 : 26,27). ஆம், அவர்களின் இருதயத்தில் மனமாற்றம் இல்லாமலிருப்பதற்கு இதுதான் காரணம். ஆதலால் தான் இவர்கள் திருவசனத்திற்கு கீழ்படியாதிருந்து, இக்காலத்திற்குரிய செய்தியை அது பிரசங்கிக்கப்பட்டவிதமாக ஏற்றுக்கொள்ளாதிருந்து இடறுகிறார்கள். ஏனென்றால் அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களாயுமிருக்கிறார்கள். (1பேது 2 : 8) பாருங்கள் இடும்புள்ளவன் இடறி விழுகிறவனாயிருக்கிறான் (எரே 50 : 32) ஆம், ஒருவனுடைய விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை (தியானியுங்கள் 1 சாமு 2 : 3, நீதி 16 : 18, 18 : 12) **இயேசு கிறிஸ்துவின் ஜெபவீடு, கல்வாரிசபை** போன்ற சபைகளில் வலதுகைக்கும் இடதுகைக்கும் வித்தியாசம் தெரியாத, வேதவாக்கியங்களில் பழக்கமில்லைாத ஒரு கூட்டம் ஜனங்கள் உண்டு. அவர்களை கொண்டு சபைக்கு நல்ல வருமானமும் உண்டு. ஆதலால் பாஸ்டர்களிடம் மனமேட்டிமையும் உண்டு. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில், தேவன் தம்முடைய சுயஇரத்தினாலே சம்பாதித்த சபையில், தேவனுடைய மந்தையில் உள்ள ஆடுகள் தான் தேவனுடைய வார்த்தையை இக்காலத்திற்குரிய செய்தியை முற்றிலுமாக விசுவாசிக்கமுடியும் (யோ 10 : 26) மேற்கூறிய சபை மேய்ப்பர்கள் தங்களது லௌகிக ஞானத்தினால் சம்பாதித்த சபையில் உள்ள ஆடுகள் தேவனுடைய வார்த்தை ஏற்றுக்கொள்ளவே, கொள்ளாது.

6. மேற்கூறிய முன்னுரை எதற்காக என்றால் இந்நாட்களில் எனது கரத்தில் இயேசு கிறிஸ்துவின் ஜெபவீடு 2013ம் ஆண்டு பந்தா படக்காலண்டர் கிடைத்தது. அதை எனக்கு கொடுத்த சகோதரன் சபை பாஸ்டரிடம் இது சகோ. காலேப் யோசுவாவிற்காக என்று கூறியே கேட்டு வாங்கிக்கொண்டு வந்ததாக கூறினார். பாஸ்டருக்கு நன்றி. அத்துடன் 2013 வது ஆண்டு காலண்டரை மிகவும் பாராட்டி, சுமார் 400 / 500 பேர்களைக் கொண்ட

குளிர்சாதன கட்டித்தில் தேவனை ஆராதித்து வரும் **சென்னை சபை** பாஸ்டர் அவர்கள் நற்சான்றிதழ் கொடுத்துள்ளார் எனக்கூறி மகிழ்ந்தார். அப்பொழுது மிகாயா தீர்க்கதரிசியை அழைக்கப்போன ஆள் அவனுடன் பேசி : இதோ, தீர்க்கதரிசிகளுடைய வார்த்தைகள் ஏகவாக்காய் இராஜாவுக்கு நன்மையாயிருக்கிறது, உம்முடைய வார்த்தையும் அவர்களில் ஒருவர் வார்த்தையைபோல் இருக்கும்படி நன்மையாகச் சொல்லும் என்று சொன்னதை 1இரா 22 : 13 நினைப்பூட்டியது.



7. இப்பொழுது இந்த பந்தா படகாலண்டர் ஜனவரி - பிப்ரவரி மாதபகுதியில் **இயேசு தம்முடைய 33 வது வயதில்** (Hoffmann's head of Christ) இவ்வாறாக இருந்தார் என ஓவியன் ஹாப்மேன் யூகித்து வரைந்த படம் ஒன்றை போட்டு அதின்மேல் இயேசுவே மெய்யான தேவன் 1யோ 5 : 20 என குறிப்பிட்டிருந்தது. இந்த ஹாப்மேன் படம் குறித்து 2006, செப்டம்பர் - அக்டோபர் மாத **இயேசுவே வாரும்** இதழில் எழுதியிருந்தேன். இந்த படத்தை 2006ம் ஆண்டு பாஸ்டர் ஜான் ஐசக் அவர்கள் நன்கு பிரேம் செய்து புதுவருட ஆராதனைக்கு சபையில் கலந்துக்கொண்ட விசுவாசிகளுக்கு இலவசமாக, தன்னுடைய அன்பளிப்பாக கொடுத்தார் என எனக்கு நினைவிருக்கிறது. அதே வேலையில் இந்த படத்தை மும்பை பாஸ்டர் அவர்கள் நல்ல விலைக்கு விற்று அதில் ஒரு நல்ல வருமானத்தை பெற்றார் எனவும் அறியவந்தேன். இப்படியாக இலவசமாகவோ, விற்பனைசெய்தோ இப்படம் விசுவாசிகள் மத்தியில் சென்றடைந்தது. நான் சிலருடைய இல்லங்களில் இந்த படம் நன்கு பிரேம் செய்து முகப்பில் தொங்கவிடப்பட்டிருப்பதை கண்டிருக்கிறேன்.

8. இதுசம்பந்தமாக கர்த்தருக்குள் நித்திரையடைந்த சகோ. தேவதாஸ் அவர்கள் திருநெல்வேலி டவுணில் உள்ள ஒரு சபைக்கு சென்றிருந்த போது, பாஸ்டருக்கு இந்த ஹாப்மேன் படம் ஒன்றை இலவசமாக கொடுத்ததாகவும், அதை பெற்றுக்கொண்ட பாஸ்டர், இது விக்கிரகாராதனை என்று கூறி, அந்த படத்தை வீட்டில் மாட்டி அலங்கரிக்கக்கூடாது என கூறி, படத்தை வாங்கி அதை தன் கால்களின் கீழ் போட்டு மிதித்ததாகவும் கூறினார். ஆனால் சில காலங்களுக்கு பின் வெளிநாட்டிலிருந்து வந்த ஒரு சகோதரன் அந்த பாஸ்டருடைய சபைக்கு செய்தி கொடுக்க சென்றதாகவும், அவருடைய செய்தியை கேட்க இவரும் சென்றிருந்ததாகவும், அப்பொழுது அந்த படம் வாசல் நேர்எதிர்சுவரில் தொங்கவிடப்பட்டிருந்ததாகவும் கூறினார். இது வந்த வெளிநாட்டினரை பிரியப்படுத்தவும், அவரிடமிருந்து ஒரு நல்ல தொகையை பெறுவதற்காக அவரை பிரியப்படுத்தும் வகையில் இது தொங்கவிடப்பட்டிருந்ததாகவும் கூறி நமது பாஸ்டர்கள் நிலையை எனக்கு விளக்கினார். நமது பாஸ்டர்கள் வெளிநாடுகளிலிருந்து வரும் ஊழியர்களிடம் நன்கு நாடகம் நடித்து, பணம் பறிக்கும் தொழிலில் மிக்க மும்முரமாக ஈடுபாடுகள் உடையவர்கள் என்பதை நாம் அறிவோம். நீங்களும் நானும் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்தால் அங்கு எவரும் வருவதில்லை. ஆனால் ஒரு வெளிநாடு சகோதரன் வந்து கூட்டம் போட்டால் ஊழியர்கள் வந்து குவிகிறார்கள். ஏன்? அங்கு ஊழியர்கூட்டம் என்று ஒன்று ஏற்பாடு செய்து ஊழியர்களுக்கு ஒரு தொகை பட்டுவாடா செய்யப்படுகிறது. பின் மட்டன் பிரியாணி சாப்பாடு. காபி, டீ எல்லாம் பரிமாறப்படுவதால் நல்ல கூட்டம் சேருகிறது. இது தான் உண்மை.

9. கிறிஸ்துவை குறித்து நீங்கள் இங்கு காண்பது போன்று அநேக ஓவியர்களால் வரையப்பட்ட படங்கள் பல விற்பனைக்கு கிடைக்கின்றன.






இவைகள் பெரும்பாலும் ஸ்தாபன சபை விசுவாசிகளின் வீட்டை அலங்கரிக்கின்றன. அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இப்படித்தான் இருந்தார் என ஒரு மனபக்குவத்துடன், அந்த படத்தை நன்கு பிரேம் செய்து, அதற்கு மெழுகு வத்தி கொளுத்தி, மாலை போட்டு அதற்கு பயபக்தியுடன் மதிப்பு மரியாதை செய்கிறார்கள். சிலர் அதற்கு முன்நின்று ஆராதிக்கவும் செய்கிறார்கள். அது போன்று இக்காலத்திற்குரிய செய்தியில் இருக்கிறோம் என்பவர்கள் இந்த ஓவியர் ஹாப்மேன் வரைந்த படத்தை தங்களின் இல்லங்களின் முகப்பு வாசலில் நன்கு பிரேம் செய்து அலங்கரித்து தொங்கவிட்டு வருகிறார்கள். கர்த்தருடைய வருகை காலதாமதமாகுமானால், காலப்போக்கில், இந்த ஸ்தாபனமக்களைபோன்று மெழுகுவர்த்தி கொளுத்தி, மாலை அணிவித்து ஆராதனைகள் செய்யவும் ஆரம்பித்துவிடுவார்கள். இதில் சந்தேகமே இல்லை. ஆனால் என்னை பொறுத்தளவில் இது என்ன? பிசாசின் வஞ்சகமே அன்றி வேறு ஒன்றுமில்லை. இது பிசாசு. சகோ. பிரன்காம்

பெயரை கூறிக்கொண்டு விசுவாசிகளை / ஊழியக்காரர்களை மயக்கி ஒரு மாறுதல்களை அவர்கள் உள்ளத்தில் கொண்டுவந்து, விக்கிரகாராதனைக்கு வழிநடத்துகிறான். எப்படியெனில் சகோ. பிரன்காம் செய்தார், ஆதலால் நானும் செய்கிறேன் என்று சகோ. பிரன்காம் பெயரைச்சொல்லி தப்பித்துக்கொள்கிறார்கள். சகோ. பிரன்காம் நடத்தையை நாங்கள் ஏன் பின்பற்றக்கூடாது என்க்கூறி தங்களை ஆறுதல்படுத்திக்கொள்கிறார்கள்.

10. **விக்கிரகாராதனை என்பது என்ன?** காணப்படுகிற அல்லது காணப்படாத, அது ஒரு மனித உருவமாகவோ, ரூபமாகவோ, சாயலாகவோ இருக்கலாம், அல்லது வானத்தில் காணப்படுகிற / காணப்பட்ட ஒரு அடையாயமாகவும் இருக்கலாம், அல்லது அந்த அடையாளத்தின் சாயலாகவும் இருக்கலாம் அல்லது அதன் உருவத்தை (Image) சிலை வடிவத்தில் மரகட்டையில் செதுக்கி அல்லது கற்களினால் செதுக்கி, (Graven Image) அல்லது உலோகத்தை உருக்கி அதனால் வார்பிக்கப்பட்ட ஒரு சொரூபத்தை உண்டாக்கி (Molten Image) அல்லது ஒரு உருவத்தை வரைந்து ( Printed Image) அதற்கு தெய்வீக கனத்தை கொடுப்பது தான் விக்கிரகாராதனையாகும். (Idolatry) இது உருவக வழிபாடு என்றும் அழைக்கப்படுகிறது. கிறிஸ்தவர்கள் மத்தியில் விக்கிரகாராதனை மிகவும் கண்டிக்கப்படத்தக்கது. இப்பொழுது கவனியுங்கள், **வேதவாக்கியங்கள் விக்கிரகாராதனைக்கடுத்த காரியங்களை குறித்து நமக்கு போதிப்பது என்ன?** மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பாக ஒரு சொரூபத்தையாகிலும், யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும், சேவிக்கவும் வேண்டாம் (யாத் 20 : 4, 5) ஆனால் நீயோ 1963ம் ஆண்டு பிப்ரவரி 28-ந் தேதி சகோ பிரன்காம் ஊழியத்தில் ஏழு தேவதூதர்கள் அவரை சந்தித்தபின், அவர்கள் அவரை விட்டு சென்றபோது ஆகாயத்தில்



**மேற்கூறிய படங்கள் யாவும் விக்கிரகாராதனைக்குரியவை ஆகும்.**
**முதலாவதாக உள்ள ஏழுதூதர்களால் உண்டான மேகவளையத்தை கொண்டு**
**இரண்டு, மூன்று மற்றும் நான்கு மணவாட்டி ஊழியம், இயேசு கிறிஸ்துவின் ஜெபவீடு, மற்றும்**
**சகோ. ராஜாவினால் சித்தரிக்கப்பட்ட படங்களாகும்.**

உண்டான அந்த மேகவளையம், இயேசு கிறிஸ்துவின் ரூபத்திற்கும் சாயலுக்கும் ஒத்த முகத்தோற்றமாயிருக்கிறது எனக்கூறி அதற்கு வாய், கண், மூக்கு வைத்து, ஓஹோ ! இது ஓவியன் ஹாப்மேன் இயேசு தமது 33வது வயதில் இப்படியிருந்தார் என்று வரைந்த படத்திற்கு ஒப்பாக இருக்கிறது எனக்கூறி, ஹாப்மேன் படத்திற்கு மக்கள் கனத்தையும் மகிமையும் செலுத்த அவர்களை திசைதிருப்புவது, அவர்களை விக்கிரகாராதனைக்கு வழிநடத்துவது இல்லையா? நீங்கள் தான் தேவனுடைய இராஜ்யத்திற்கு பிரவேசிப்பதில்லை மற்றவர்களையும் தடைசெய்வது ஏன்? நீங்கள் பிசாசின் பிடியிலிருந்து உங்களை விடுவித்துக்கொள்ளமாட்டீர்களா? தேவன் உங்களை நேசிக்கிறார். கத்தோலிக்க திருச்சபை மக்களை விக்கிரகாராதனைக்காரர்கள் என குறைகூறிக்கொண்டு நீங்களும் அவர்களை போன்று விக்கிரகாராதனைக்குள் விழுந்தது என்ன? கத்தோலிக்க திருச்சபையினர் விக்கிரகாராதனையில் நன்கு ஊரியவர்கள். நீங்களோ ஆரம்பநிலையிலிருந்து வளர்ந்து வருகிறீர்கள். உங்கள் இருவருக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை இதுதான். ஆனால் நீங்கள் இருவரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் தான்.

11. மேலும் கவனியுங்கள் வானத்தில் காணப்படும் எந்த ஒரு அடையாத்தை கொண்டும் நமக்கு ஒரு சொரூபத்தை உருவாக்கக்கூடாது. அது விக்கிரகாராதனைதான். மேலும் சித்தரவேலையின் படங்களை தெய்வமாக மாற்றி அதற்கு துதிகனம் மகிமை செலுத்தினாலும் அதுவும் விக்கிரகாராதனையே. அவர்கள் பின்னடைந்து மிகவும் வெட்கப்படுவார்கள். இதுகுறித்து நீங்கள் ஏசா 42,46 எரே 10 அதிகாரங்களை நன்கு தியானியுங்கள். சித்திரந்தீர்ந்தகல்லை நமஸ்கரிக்கவும் கூடாது லேவி 26 : 1 யாதொரு சித்திரத்தையும் வரைந்து அதற்கு முன் நின்று அதை வணங்கவும் கூடாது. அதற்கு தொழுகைக்குரிய கனத்தையும் கொடுக்கக்கூடாது. அதற்கு முன்நின்று மன்றாட கூடாது. அதற்கு முன்னின்று அதை பணியக்கூடாது (எசே 8 : 11) ஆக பிரியமானவர்களே ஹாப்மேன் படத்திற்கடுத்த உங்கள் நடத்தைகள் யாவும் வேதவாக்கியங்களின் அடிப்படையில் விக்கிரகாராதனைக்கடுத்ததாகவே இருக்கிறது.

12. சகோ. பிரன்காம் டிசம்பர் 30, 1962 ல் **ஐயா, இது தான் முடிவின் அடையாளமா?** என்றதொரு செய்தியை கர்த்தராகிய தேவனால் அவருக்கு அளிக்கப்பட்ட சபை, பிரன்ஹாம் கூடாரம் - இங்கு பிரசங்கித்தார். அப்பொழுது 8 நாட்களுக்கு முன் தான் கண்ட ஒரு தரிசனத்தை கூறுகிறார். இதை, இந்த செய்தியின் 204 வது பத்திமுதல் 221 வது பத்தி வரை (புதிய பதிப்பு) தியானிக்கலாம். அவர் கூறியதின் சுருக்கம் என்னவென்றால் : சகோ பிரன்காம் ஒரு பயங்கர சத்தத்தை கேட்கிறார். அந்த சத்தம் பலத்த இடிமுழக்கமும் மின்னலுமாயிருக்கலாம், ஆனால் அவர் மின்னலை காணாததால், அது ஒரு பலத்த சத்தம் மாத்திரமே என்கிறார். அப்பொழுது அவர் மேற்கு நோக்கிக்கொண்டிருந்தார். அப்பொழுது நித்தியத்திலிருந்து, ஏதோ ஒரு கூட்டம் வருகிறதை காண்கிறார். அது சிறு புள்ளிகள் போல் தென்பட்டதாம். மொத்தத்தில் 5 க்கு குறையாமல் 7க்கு அதிகமில்லாதிருந்தது என்கிறார். சரியான எண்ணிக்கையை அவரால் கூறமுடியவில்லை. அந்த கூட்டத்தின் வருகை ஒரு கூர்நுனிக்கோபுர வடிவில் இருந்ததாம். அது தேவதூதர்களுடைய கூட்டம். அந்த தூதர்களை தன் கண்களால் கண்டார். அவர்கள் பனியைப்போன்று வெண்மை நிறமுடையவர்களாய் இருந்தனர். அவர்களுடைய சிறகுகள் தலையில் அமைந்திருந்தன. அவர்கள் இறங்கி வரும்போது, வ்யூ வ்யூ என்று சீட்டி அடிக்கும் சத்தம் போல் கேட்டது என்கிறார். இது நிகழ்ந்த சமயம், சர்வ வல்லமையுள்ள தேவனுடைய வல்லமை அவரை உயர தூக்கி, தான் மேலே எடுக்கப்பட்டு, கூர்நுனிக்கோபுர வடிவத்தில் இருந்த தேவதூதர்கள் கூட்டத்திற்குள் கொண்டுசெல்லப்பட்டேன் என்கிறார். அந்த தூதர்கள் மத்தியில் தான் இருந்தபோது, மிகவும் பயந்து, தன் உணர்ச்சிகள் அனைத்தையும் இழந்து போனேன் என்கிறார். இந்த தரிசனம் அவரை விட்டு விலகியபின் ஏதோ ஒன்று நிகழ ஆயத்தமாயிருக்கிறது என எண்ணினார். அப்பொழுது காலை சுமார் 10 மணியிருக்கும்.

13. இப்பொழுது அந்த தரிசனத்தின், சம்பவம் நடந்ததை குறித்து **மலையின் மேலுள்ள கவர்ச்சி என்ன?** என்ற செய்தியில் பத்தி 131 முதல் விளக்குகிறார். ஒரு நாள் சகோ ஃபிரட்வுடன் சபீனா மலை கனவாய்க்கு Sabina Canyon) காட்டு பன்றி வேட்டைக்கு அதிகாலையில் செல்லுகிறார். அப்பொழுதுதான் சூரியன் மேலே வந்துகொண்டிருந்தது. அவர் மலையின் மறுபக்கத்தை அடைந்தார். அப்பொழுது அவருக்கு, அவர் கண்ட தரிசத்தை குறித்து எந்த நினைவும் இல்லை. அப்பொழுது திடீரென்று யாரே தன்னை சுட்டுவிட்டார்கள் என நினைத்தார். அது ஒரு வெடி சத்தத்தைப்போல் இருந்தது. அது தேசம் முழுவதையும் அசைத்தது. அப்படி நேரிட்டபோது, அவருக்கு முன்பாக ஏழு தேவதூதர்கள் கூட்டமாக நின்றுக்கொண்டிருந்தனர் என்கிறார். இந்த சம்பவம் குறித்து சகோ. ஃபிரட் மற்றும் பலரிடம் கர்த்தர் உரைக்கிறதாவது வேதாகமத்தில் இத்தனை ஆண்டுகளாக, ஸ்தாபனங்களுக்கும் மற்றவர்களுக்கும் மறைக்கப்பட்டிருந்த ஏழு பரம இரகசியங்களை தேவன் ஏழு முத்திரைகளிலிருந்து வெளிப்படுத்த போகிறார் என்றார். அந்த தூதர்கள் திரும்பி சென்றபோது உண்டான வட்டம் ஒரு மூடுபனியைப்போல் உயர எழும்பியது. பின் அது வந்த வழியாகவே மேற்கு திசையில் வட்டமிடத் தொடங்கியது. சிறிது கழித்து விஞ்ஞானம் அதை 30 மைல் உயத்தில் 25 மைல் விட்டம் அளவில் கூர்நுனிக் கோபுர வடிவில் வட்டமிட்டுக்கொண்டிருப்பதை கண்டது என்கிறார். அதன்பின் இன்னொரு நாள் அங்கு நின்றுக்கொண்டு, அந்த படத்தை வலது பக்கம் திருப்பினபோது, ஏழு சபையின் காலங்களில் இயேசு காணப்பட்ட விதமாக அது இருந்தது. தலையில் வெள்ளை தலைஅங்கியை (Wig) அணிந்து, சகல அதிகாரமும் கொண்ட தேவனாக, அவர் அல்பாவும் ஒமேகாவும் ஆதியும் அந்தமுமாயிருக்கிறார், அவரே எல்லா நித்தியத்திற்கும் பிரதானமான நீதிபதியாயிருந்து, அங்கு நின்றுகொண்டு, அந்த மணி நேரத்திற்கான செய்தியை உறுதிப்படுத்துகிறார் என்கிறார். பாருங்கள் அந்த ஏழு தூதர்கள் தோற்றத்தை சகோ. பிரன்காம் அப். 1 : 9-11, வெளி 8 : 1, வெளி 10 : 1 உடன் ஒப்பிடவில்லை. அப்படியானால் இந்த ஏழு தூதார்கள் கூட்டத்ததை குறித்து மேற்கூறிய வசனங்களுடன் இணைத்து உபதேசிக்கும் உங்கள் பாஸ்டர்கள் அனைவரும் சகோ. பிரன்காமையும் மிஞ்சிவிட்டார்கள். அது என்ன? பிசாசு.

14. மேலும் இந்த சம்பவம் குறித்து Trying to do God a services without it being God's will. Dated Nov. 27.1965. செய்தியில் பத்தி 65 முதல் 89 வரை நிங்கள்தியானிக்கலாம். இந்த மேக வளையம் குறித்து பத்தி 83ல் சகோ. பிரன்காம் கூறும் போது, அது எங்கிருந்து வந்தது, அல்லது அது எங்கு சென்றது என்று அவர்களுக்கு இது வரை தெரியாது. அது முற்றிலுமாக விஞ்ஞானத்தை மலைக்கவைத்து விட்டது. **என்ன நடந்தது என்று அவர்களுக்கு தெரியவில்லை. ஆனால் அது நமக்கு தெரியும். அது வானங்களில் அடையாளங்கள் காணப்படும் என்பதாகும் என்கிறார்.** They don't know where it come from or where it went, they don't know yet. Science is completely stumped about it, don't know what happened. But we know; there shall be sign in the heaven above. We know it. See? பாருங்கள் அது அப். 1:9, வெளி. 10:1 மற்றும் 8:1 சம்பவமே இல்லை. மாறாக **அது ஏழு தூதர்களால் உண்டான மேகவளையம் வானத்தில் காணப்பட்ட , ஏழு முத்திரைகளின் ரகசியங்கள் திறக்கப்படபோவதை உறுதி செய்ய தேவனுடைய அடையாளம்.**

15. ஏழு தூதர்களுடைய கூட்டத்தினால் உண்டான அந்த அதிசய மேகவளையம் அப் 1 : 19, வெளி 8 : 1 மற்றும் வெளி 10 : 1 ன் சம்பவங்கள் என்பது மாயையான போதகம். அப்படிப்பட்டதான உபசேதங்கள் பிசாசினுடையது. இன்று உங்கள் மத்தியில் உள்ள பெரும்பாலான பாஸ்டர்கள் பிசாசின் பிடியில், வஞ்சிக்கிற ஆவியினால் வழிநடத்தப்பட்டு வருகின்றனர் என்பதை உங்களுக்கு தெளிவு படுத்த விரும்புகிறேன். பாருங்கள் **உயர வானத்திலே அற்புதங்களையும், புகைக்காடாகிய அதிசயங்களையும் காட்டுவேன்** என்று தேவன் உரைத்திருக்கிறார். அப். 2 : 19. இது எப்பொழுது நடக்கக்கூடிய சம்பவம்? கடைசி நாட்களில் அப் 1 : 17

இப்பொழுது இதுகுறித்து சகோ. பிரன்காம் என்ன கூறுகிறார் என்பதை கவனியுங்கள். செய்தி : **ஷாலோம்.** நாள் 12.01.1964 பத்திகள் 64, 65 ஐ தியானியுங்கள். நான் அதை சுருக்கமாக இங்கு எழுதுகிறேன். ஏழு முத்திரைகளின் இரகசியம் வெளிப்படுவதற்கு முன்பு, அந்த மகத்தான இரகசிய ஒளி (அதாவது அந்த ஏழுதூதர்களால் உண்டாண அதிசய மேகவளையம்) நாங்கள் இருந்த டுக்ஸானிலுள்ள ஃபிளாக் ஸ்டாப்புக்கு (Flag staff) மேலே வானத்தில் தோன்றின. அன்று காலை சகோ. பிரன்காமுடன் சகோ. ஃபிரட் சாத்மன் (Fred H.Sothmann) வயது 52, கனடா நாட்டில் கோதுமை பயிடுவோன் (Canada Wheat former) மற்றும் சகோ. ஜீன் நார்மன் (Gene Norman) வயது 49, டுக்ஸானில் நிலங்களுக்கு இயற்கை காட்சிகளை கொண்டு வடிவமைப்பவர் (Land Scaper) இருந்தனர். அன்று பிற்பகல் அதாவது மதியத்திற்கும் மாலைக்கும் இடைப்பட்ட நேரத்தில் மூன்று வெவ்வேறு இடங்களில் வேட்டையாட சென்றிருந்தனர். அப்பொழுது திடீரென்று வெடிசத்தம் போன்ற ஒரு பெரிய சத்தத்தை கேட்டனர். "V" வடிவில் வானத்திலிருந்து ஏழு தூதர்கள் வந்தனர். சகோ. பிரன்காம் சற்று பூமியில் மேல் எடுத்துக்கொள்ளப்பட்டதை போன்று உணர்வடைந்தார். அவர்கள் ஏழு முத்திரைகள் முத்தரிக்கப்பட்டுள்ள வேதாகமம் முழுவதுமுள்ள ஏழு பரமரகசியங்கள் வெளிப்படும் நேரம் வந்துவிட்டது, கிழக்கே திரும்ப போ (Go back east) என்று கூறும் சத்தத்தை கேட்டதாகவும் கூறுகிறார். காலங்கள் தோறும் சபைக்காலங்களின் தூதர்கள், அதில் சில பாகத்தை மாத்திரம் திறந்தனர். ஆனால் ஏழாம் மணி நேரத்தில் ஏழாம் தூதனின் நாட்களில், இந்த இரகசியங்கள் அனைத்தும் நிறைவேறும். அவர் ஏழு முத்திரைகளை உடைத்து அதன் ரகசியங்கள் வெளிப்படுத்துவதற்கு முன்பு, **அவர் அந்த அற்புதத்தை முதலில் வானத்தில் காண்பித்தார்.** அவர் அதை பூமியில் செய்வதற்கு முன்பே, அதை வானங்களில் வெளிடுப்படுத்துகிறார், அவர் எப்பொழுதும் அப்படியே செய்து வருகிறார். **அவர் முதலில் தமது அடையாளத்தை வானங்களில் காண்பிக்கிறார். அது அடையாளம் மூலமாக தேவன் கொடுத்த சாட்சியாகும்.** மேலும் இந்த சம்பவம் குறித்து சகோ. ஃபிரட் அந்த மேகம் முதலாவது வட்ட வடிவமுள்ள மேகமாக (Circular shaped cloud) சிறிய தோற்றத்திலிருந்து பெரிதாகிக்கொண்டே சென்றது என்கிறார். ஆனால் இதற்கு மாறாக சகோ. நார்மன் அது வட்டவடிவமாக இல்லை மாறாக நீளமான, மெல்லிய தோற்றத்தில் (Not Circular in form but long and thine) என்கிறார்.

16. இப்பொழுது இந்த சம்பவம் குறித்து விஞ்ஞானம் என்ன கூறுகிறது? **ஸ்டிரடோஸ்பிரியர் மேல் மேக வளையம்** (Cloud - Ring in the upper stratosphere) என்ற தலைப்பில் அமெரிக்கா, டுக்ஸன், அரிசோனா பல்கலை கழகம் வளிமண்டலம் இயற்பியல் கலாசாலை - ஜேம்ஸ். E. மெக்டோனால்ட் அவர்கள் அறிக்கையின் சுருக்கத்தை கீழே தருகிறேன். குறிப்பு : ஸ்டிரடோஸ்பிரியர் என்பதன் அர்த்தம் : புவிபரப்பிற்கு மேல் 9 கி.மீ முதல் 24 கி.மீ வரை நீடித்திருக்கும் வளிமண்டலம். இதன் வெப்பநிலை ஏறக்குறைய - 45 டிகிரி சென்டிகிரேடு முதல் - 75 டிகிரி சென்டிகிரேடாகும். 1963 ம் ஆண்டு, பிப்ரவரி, 28ம் நாள் சூரிய அஸ்தமனத்தின்போது, தென்மேற்கே





The ring-cloud over Flagstaff is flattened by perspective into a long thin loop in this photo by Lynne E. Cobble, taken at Albuquerque, N. M., some 285 miles from the cloud. Intense low-angle forward-scattering by the cloud particles (presumed to be water or ice) creates strong contrast against the twilight sky. Sun had set at Albuquerque almost a half hour before this photo was made at 1840 MST. Kodak Retina Reflex camera F4 1/8th of sec. with 135mm telephoto lens. Photo courtesy Sgt. Arthur A. Francis, Kirtland AFB, who is making a study of the phenomenon.





கிட்டத்தட்ட 200 ஆயிரம் சதுரமைல் பரப்பளவில் சிதறியிருந்த மக்கள், அவர்களின் உள்ளத்தையும், கருத்தையும் கவரத்தக்க அழகிய மேககாட்சியை கண்டு சான்று பயின்றனர். டுக்ஸானிலிருந்து அக்காட்சியை கண்டபோது நான் எண்ணிய வண்ணமாகவே அநேகரும் அதை ஜெட்விமானம் விட்டுசெல்லும் பெரிய புகைமண்டலம் என்று எண்ணினார்கள். அஸ்தமிக்கும் சூரியனின் கதிர்கள் மேற்கில் உள்ள உயரமான சிர்ரஸ் (Cirus) மேகங்களை இருளாக்கிய நிலையில் அந்த மேகவளையமானது மட்டும் அழகான வெள்ளியை போன்று

ஒளிர்ந்து கொண்டிருந்தது. அப்பொழுதுதான் அதன் உயரத்தை குறித்த தடையம் கிடைத்தது. அதன் உயரம் 30 கி.மீக்கு மேல் என நிர்ணயம் செய்யப்பட்டது. இந்த மேகம் குறித்து சுமார் 200 அறிக்கைகள் கிடைத்தன. 35 வேறுபட்ட வட்டாரங்களிலிருந்து 85 புகைப்படங்கள் வந்து சேர்ந்தன. மேற்கண்ட புகைபடங்கள் 1, 2, 3, 4 எடுத்துக்காட்டுக்காக. இதில் படம் நான்கை சயன்ஸ் (Science) பத்திரிக்கை ஏப்ரல் 19, 1963 அன்று வெளியிட்டது. இந்த அதிசய மேகம் சூரிய அஸ்தனமனத்திற்கு பிறகும் 28 நிமிடங்களுக்கு சூரிய ஒளியில் ஒளிர்ந்தது. இந்த மேகத்திற்கு நேர் கீழாக இருந்த பார்வையாளர்களாகிய அரிசோனா பிளாக் ஸ்டாப் பட்டிணத்தின்கீழ் இருந்த மக்களுக்கு இது பச்சை நீலநிறம் கொண்டதாகவும், அவ்வப்போது இளம் சிகப்பு நிற சாயலிலும் காணப்பட்டதாக கூறினர். To observers nearly underneath, the colours Green and Blue were visible, and a pinkish cast was noted at times. மேலும் இது அரிசோனாவில் உள்ள பொரும்பாலான மக்களுக்கு வெள்ளியை போன்று வெண்ணிறமாகவும் (Slivery white) நியு மெக்ஸிகோவில் உள்ளவர்களுக்கு வானவில்லை போன்றும் (Iridescence - வானவில் வண்ணத்தை போன்று, இடத்திற்கு தக்கபடி பன்னிறம் கொண்டதாக) காட்சியளித்தது. பொதுவாக அரிசோனாவில் உள்ள பல பட்டணங்களில், மற்றும் சுற்றுபுற மாகானங்களிலும், இது அசாதாரமான வடிவமைப்புடன், பல வண்ணங்களுடன் காணப்பட்டது. சிந்தியுங்கள், தேவனுடைய பிரசன்னம் ஒரே நேரத்தில் பற்பல இடங்களில், பலவிதமான தோற்றங்களில் காணப்படுமா? அது எங்கிருந்து பார்த்தாலும் ஒரே தோற்றத்தில் காணப்படவேண்டும் அல்லவா? ஆதலால் எனக்கு பிரியமானவர்களே, ஏழு தூதுர்களால் உண்டான அந்த அதிசய மேகவளையம், வானத்தில் காணப்பட்ட ஒரு அடையாளமேயன்றி, அது தெய்வீக பிரசன்னம் கிடையாது. கண்ட கண்ட உபதேசங்களை கேட்டு மதிமயங்கிப்போகாதீர்கள். எதற்கும் தேவனுடைய வார்த்தைகே திரும்புங்கள். மேலும் இதுகுறித்து, The Acts of the prophet சகோ. பியரி கிரீன் (Bro. Pearry Green) என்ன கூறுகிறார் என்றும் பார்த்தேன். அவர் It was super natural and God sent it as a sign to the bride என முடித்துவிட்டார். ஆம் மணவாட்டிக்கு இது காலத்தையும், அதன் செய்தியையும் கண்டுக்கொள்ள கொடுக்கப்பட்ட ஒரு அடையாளமே அன்றி மற்றபடி அல்ல.

17. நான் இங்கு உங்ளுடைய கவனத்திற்கு கொண்டுவர முயற்சிப்பது என்னவென்றால் : "தேவஆவியானவருக்குரிய நிறம் அக்கினி மயமான சொகுசா (Amber) எசே 1 : 4,5 இது மஞ்சள் கலந்த பச்சையாகும். (Yellowish Green) மஞ்சள் கலந்த பச்சை நிறம் சொகுசாவின் நிறம். ஒளியானவர் நம்மிடத்தில் மஞ்சள் கலந்த பச்சை நிறத்தில் மட்டுமே வருவார். ஆனால் ஜனங்கள் கண்ட மேகத்தின் நிறம் பச்சை மற்றும் நிலநிறம், அத்துடன் அவ்வப்போது இளஞ்சிவப்பு நிறச்சாயலாகும் ஆகும். மேலும் பல வண்ணங்களுடன் அசாதாரமான வடிவமைப்புடனும் காணப்பட்டுள்ளது. இதிலிருந்து இந்த 1963, பிப்ரவரி 28ந் தேதி உண்டான அதிசயமான மேகம் தேவனுடைய தோற்றம் அல்ல. மாறாக அது ஒரு அடையாளம் என்பது மிக்க தெளிவு ஆகும். வானத்தில் மேல் அடையாளங்கள் தோன்றும், அது காலங்களின் அடையாளமாகும். ஆக இந்த காலங்களுக்கடுத்த அடையாளத்தை நீங்கள் தெய்வீக வழிபாட்டிற்காக பயன்படுத்துவதும், அதோடு மட்டுமல்ல இந்த அடையாளத்திற்கு ஒப்பாக ஹாப்மேன் வரைந்த இயேசுவின் 33 வயது படம் உள்ளது எனக்கூறி அதற்கு தெய்வீக கனத்தையும், மகிமையையும் கொடுப்பது முற்றிலுமாக ஒரு விக்கிரகாராதனையாகும். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அவயவமாய் உள்ள எனக்கு பிரியமானவர்களே நீங்கள் ஓவியன் ஹாப்மேன் வரைந்த படத்தை உங்களது இல்லங்களின் சுவற்றில் தொங்கவிட்டு அதற்கு துதி கனம் மகிமை செலுத்துகிறதான விக்கிரகாராதனைக்கு விலகி உங்களை காத்துக்கொள்வீர்களாக.

18. தேவனுடைய ரூபமாயிருந்து, தேவனுக்கு சமமாயிருந்த கிறிஸ்து இயேசு, மனுஷ சாயலாகி, மனுஷரூபமாய் காணப்பட்டார் பிலி 2 : 6,7,8 ஆனால் நீங்களோ அந்த கிறிஸ்து இயேசுவை ஒரு ஓவியனாகிய ஹாப்மேன் வரைந்த படத்தின் சாயலாக்கலாமா? ரூபமாக்கலாமா? உங்களது அக்கிரம செயலுக்கு தேவனுடைய சமூகத்தில் மன்னிப்பு உண்டா? ஹாப்மேன் வரைந்த படம் வானவருடைய சாயலுக்கு ஒப்பாகுமா? அப்படியானால் இந்த ஹாப்மேன் வரைந்த படத்தின் சாயலைத்தான் நாம் தரித்துக்கொள்ளப்போகிறோமா (1கொரி 15 : 49) இது என்ன மதியீனம்? தேவனுடைய சாயலை ஒரு ஓவியன் வரைந்த படத்திற்கு சாயலாக ஒப்பிடலாமா? ஏசா 40 : 18. நீங்கள் பிசாசின் கண்ணியிலிருந்து மீளவே முடியாது. தேவகுமாரனுடைய சாயலை ஒரு மனுஷன் வரைந்த படத்திற்கு ஒப்பிடலாமா? ரோ 8 : 29. எந்தவிதமான சாயலான படங்களையோ, விக்கிரகங்களையோ நாம் உண்டாக்கி அதற்கு தேவனுக்கு கொடுக்கவேண்டிய கனத்தை கொடுக்கக்கூடாது உபா 4 : 23. ஆம் பிரியமானவர்களே கர்த்தருக்கு கோபம் உண்டாக்க அவர் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்ய, உங்களை இயேசு கிறிஸ்துவின் ஜெபவீட்டிற்கும், மணவாட்டி ஊழியத்திற்கும் விற்றுப்போடாதீர்கள். உபா 4 : 25. நாம் விழிக்கும்போது தேவனுடைய சாயலால் திருப்தியாகவேண்டியவர்களாயிருக்க (சங் 17 : 15) இந்த ஹாப்மேன் வரைந்த படத்தை பார்த்து திருப்தியாவது என்ன? சாத்தான் எவ்வளவு சாதுரியமாக உங்களை விக்கிரகாராதனைக்கு வழிநடத்துகிறான் என்பதை காண பிரகாசமுள்ள மனக்கண்களை தேவன் உங்களுக்கு கொடுப்பாராக.

19. இந்த காரியத்தில் முடிவாக, எனக்கு பிரியமானவர்களே மனுஷருடைய கைவேலையால் வரையப்பட்ட ஒரு படத்தை வானவருடைய சாயலுக்கு ஒப்பிட்டு விக்கிரகாராதனை செய்யாதிர்கள். சங் 115 : 4. மனுஷசாயலாக, மனுஷரூபத்தின்படி ஹாப்மேன் ஓவியனால் சித்திரம் வரையப்பட்ட படத்தை ஆராதிக்காதீர்கள். (ஏசா 44 : 13)

உங்களை நீங்களே கெடுத்துக்கொள்ளாதீர்கள். தேவன் விதித்த வழிகளை விட்டு விலகாதீர்கள். ஹாப்மேன் இயேசு 33 வயதில் என கூறி வரைந்த படத்தை இவர்தான் நமது மெய்யான தேவன் 1யோ 5 : 20, இவர்தான் மாம்சத்தில் வெளிப்பட்ட தேவன், வார்த்தையாகிய தேவன் என உங்கள் இருதயத்தில் அந்த படத்திற்கு ஒரு கனத்தைக்கொடுத்து வஞ்சிக்கப்படாதீர்கள். இது கொடிதான வஞ்சிப்பின் காலமாயிருக்கிறது.

20. அப். யோவான் இப்படிப்பட்டதான ஒரு படத்தை சுட்டிக்காட்டி இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார் என்று 1யோ 5 : 20 ல் கூறவில்லை. ஆக அப். யோவான் சுட்டிக்காட்டாத ஒன்றை இவர்தான் மெய்யான தேவன் என்று கூறும் இந்த பாஸ்டர்கள் யார்? சகோ. பிரன்காம் பெயரைக்கூறி மக்களின் விசுவாசக்கப்பலை சேதப்படுத்தும் இந்த பாஸ்டர்கள் பிசாசின் பிடியிலே உள்ளார்கள் என்பதை நீங்கள் நங்கு அறியவேண்டும்.

THE SUN-CLOTHED WOMAN



Rev. 12 :1,2

21. இங்கு சற்று கவனியுங்கள். **ஒரு பெரிய அடையாளம் வானத்தில் காணப்பட்டது, ஒரு ஸ்திரீ சூரியனை அணிந்திருந்தாள், அவள் பாதங்களின் கீழே சந்திரனும், அவர் சிரசின்மேல் பன்னிரெண்டு நட்சத்திரங்கள் உள்ள கிரீடம் இருந்தன** என்று யோவான் கூறுகிறான். வெளி 13 : 1 இந்த காட்சியை கொண்ட படத்தை நீங்கள் கத்தோலிக்க திருச்சபையினர் இல்லங்களில் அவர்கள் வீட்டு சுவரை அலங்கரிப்பதை கண்டிருப்பீர்கள். அந்த ஸ்திரீ மரியாளை சித்தரிப்பதாக உள்ளது. இப்பொழுது அதே போன்று வானத்தில் காணப்பட்ட, ஏழு தூதர்களால் உண்டான அந்த அதிசய மேகவளையத்தை, அடையாளத்தை **கிறிஸ்துவின் மணவாட்டி** என்று தங்களை அழைத்துக்கொண்டு, மக்கள் தங்கள் வீட்டு வாசல் முகப்பில் தொங்கவிட்டுக்கொண்டு, அதை கிறிஸ்து என்ற பார்வையில் **இருக்கிறவராக இருக்கிறேன், இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார்** எனகூறிக்கொண்டு அதற்கு துதி கனம் மகிமை செலுத்திவருகிறார்கள். இது எங்கிருந்து ஆரம்பித்து, எங்கு சென்று முடிகிறது என்பதை கவனித்தீர்களா? ஆரம்பத்தில் ஆரம்பித்த அதே வஞ்சகம், இப்பொழுது முடிவில். ஆரம்பத்தில் ஆரம்பித்த அதே விக்கிரகாராதனை, மீண்டும் முடிவில். ஆரம்பத்தில் தேவனுடைய வார்த்தைக்கு கொடுத்த அதே தவறான வியாக்கியானம், முடிவு நேரத்திலும் காணப்படுகிறது. முதல் மணவாட்டியிடம் ஆரம்பமான அதே வஞ்சிப்பு, முடிவு நேரத்தில் உள்ள மணவாட்டியிடம் வந்து முடிவடைகிறது. முன்பு நடந்ததே இப்பொழுதும் நடக்கிறது. முதல் மணவாட்டியோ வஞ்சிக்கப்பட்டாள். ஆனால் முடிவுகால மணவாட்டியோ வஞ்சிக்கப்படமாட்டாள். பாருங்கள், கூடுமானால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக. (மத் 24 : 24) ஆனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களை வஞ்சிக்கமுடியாது.

22. இப்பொழுது இங்கு சகோ. பிரன்காம் இந்த ஹாப்மேன் சித்திரம் குறித்து என்ன கூறுகிறார் என்பதை அவருடைய செய்தி **வித்து பதருடன் சுதந்தரவாளியாயிருப்பதில்லை** யில் பக்கம் 3, 2வது பத்தி முதல் 6 வது பக்கம் முதற் பத்தி வரை தியானிக்கலாம். இந்த செய்தி 1965, பிப்ரவரி 18ந் தேதி கொடுக்கப்பட்டது. ஆங்கிலத்தில் The seed is not heir with the shuck. பத்தி 12- 26 வரை தியானிக்கலாம். இங்கு சகோ. பிரன்காம் சுமார் 1935ல் நடந்த ஒரு சம்பவத்தை கூறுகிறார். அதாவது அவர் கண்ட தரிசனத்தை கூறுகிறார். அவர் தன் தகப்பனாரின் இரட்சிப்புக்காக ஜெபித்துக்கொண்டிருந்த வேளையில் தரிசனத்திற்குள்ளானார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அவரது தலைக்குமேல் பத்தடி உயரத்தில் நின்றுக்கொண்டிருப்பதை கண்டார். அவர் வெள்ளை அங்கி தரித்திருந்தாராம். அங்கியின் ஓரங்களில் சுருக்கு (Fringe) வைக்கப்பட்டிருந்ததாம். அவரது தலை மயிர் தோல் வரை வளர்ந்திருந்தது என்கிறார். மேலும் அவர் 30 வயது தோற்றமுள்ளவராய், சிறிய உருவம் படைத்தவராய், மெலிந்துக்காணப்பட்டார் என்கிறார். அவரது எடை 130 பவுண்ட்களுக்கு அதிகமாக இருக்கமுடியாது என்கிறார். அவரது முகத்தோற்றம் ஹாப்மேன் வரைந்த **33 வயதில் கிறிஸ்துவின் முகச்சாயல்** என்ன படத்தில் இருப்பது போன்று காணப்பட்டது என்கிறார். ஆதலால் அந்த ஹாப்மேன் வரைந்த படத்தை தன் வீட்டில் தொங்கவிட்டிருப்பதாகவும், தான் படிக்கும் புத்தகங்களிலும், கூடுமான இடங்களில் எல்லாம் வைத்திருப்பதாக கூறுகிறார். இந்த நேரத்தில் அவர் கர்த்தருக்குள் வந்து சிறிது சமயம் தான் ஆயிற்று எனவும் அவர் பிரசங்கம் பண்ணதொடங்கி அப்பொழுது ஆறு மாதங்கள் ஆயிற்று எனவும் தன் ஊழியத்ததை குறித்து கூறுகிறார். அவரது முகதோற்றத்தின் தன்மையை எந்த ஓவியனாலும் தத்ரூபமாக சித்தரிக்கவே முடியாது எனவும் கூறுகிறார். எதற்காக இந்த காட்சியை கண்டேன் என்று இதுவரை 1965 பிப்ரவரி 18 வரை தனக்கு புலனாகவில்லை என்றும் கூறுகிறார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தரிசனத்தில் கண்டசமயம் அவர் பாப்திஸ்ட் சபையில் ஒரு மூப்பனாக இருந்ததாகவும் கூறுகிறார். இந்த தரிசனத்தை **காலமணல்களின் மேலுள்ள அடிசுவடுகள் - எவ்விதமாக தூதன் என்னிடத்திற்கு வந்தார்** என்ற செய்தியிலும் பத்தி 37 முதல் 45 வரை கூறுகிறார். செய்தி நாள் 17.01.1955.

23. இங்கு நாம் தியானிக்கவேண்டியது என்னவென்றால் : இயேசு கிறிஸ்து பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டபிறகு எந்த ஒரு நபருக்கும், எந்த ஒரு சமயத்திலும் அவர் பூமியில் கொண்டிருந்த

சரீரத்தை கொண்டு தரிசனத்தில் காட்சி அளித்ததாக வேதவாக்கியங்களில் எங்கும் ஆதாரங்கள் கிடையாது. அவர் என்று இந்த பூமியில் பிறந்தாரோ அன்று முதல் தன் இரட்சிப்பின் பணியை முடித்து பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டாரோ அன்று முடிய அவருடைய முதலாம் மாம்ச வருகை முடிந்துவிட்டது. இப்பொழுது நாம் பரிசுத்தஆவியின் வழிநடத்துதலுக்குள் வந்துவிட்டோம். இனி இயேசு கிறிஸ்துவின் மாம்ச சரீரத்தை அவர் மறுபடியும் தாவீதின் குமாரனாக ஆளுகைக்கு வரும் வரை காணமுடியாது. அவர் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டபின்பு அப்போஸ்தலர்களுக்கு **கர்த்தருடைய தூதன் மூலம்** இடைப்படுகிறார். அப் 5 : 19.சுவிசேஷகனாகிய பிலிப்புடன் **ஆவியானவர்** (Spirit) இடைப்படுகிறார். அப் 8 : 29 இந்த ஆவியானவரை குறித்து **கர்த்தருடைய ஆவியானவர்** (Spirit of the Lord) என அப் 8 : 39 ல் காண்கிறோம். சவுல் பிரயாணமாய்போய் தமஸ்குவிற்கு சமீபித்தபோது, சடிதியிலே வானத்திலிரந்து ஒரு **ஒளி** அவனை சுற்றி பிரகாசித்தது. அந்த ஒளியிலிருந்து சத்தத்தை கேட்கிறான். ஆண்டவரே நீர் யார் என சவுல் கேட்க, அதற்கு கர்த்தர் : நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே என்றார். ஒளியிலிருந்த கர்த்தர் சவுலோடு இடைப்படுகிறார். அப் 9 : 3-5. கர்த்தர் அனனியாவுக்கு தரிசனமாகிறார் (Saith the Lord in a Vision) அப் 9 : 10. **தேவனுடைய தூதன்** கொர்நேலியுவுக்கு தரிசனமானார். அப் 10 : 3. அவர் பிரகாசமுள்ள வஸ்திரத்தை தரித்திருந்த மனுஷன் என கூறப்படுகிறது அப் 10 : 30. பேதுரு ஞானதிருஷ்டியடைந்து **சத்தத்தை** கேட்டான். அப் 10 : 10, 15. அந்த சத்தம் **ஆண்டவருடையது** அப் 11 : 7,8. ஆண்டவர் யார்? அவர் ஆவியானவர், அப் 11 : 12. பேதுருவோடு **கர்த்தருடைய தூதன்** இடைபடுகிறான் அப் 12 : 7-11 **கர்த்தர்** பவுலுக்கு தரிசனமாகிறார். அப் 18 : 9. அகபு என்றும் தீர்க்கதரிசியோடு **பரிசுத்தஆவியானவர்** இடைப்படுகிறார் அப் 21 : 10,11. **பரிசுத்த ஆவியானவர்** பவுலின் பிரயாணத்தை தடைப்பண்ணினார். அப் 16 : 6. **கர்த்தர்** பவுலின் அருகே நின்றார். அப் 23 : 11. அவரை **தேவனுடைய தூதனாவர்** என பவுல் கூறுகிறான். அப் 27 : 23. கவனியுங்கள், பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இயேசு, (லூக் 24 : 51) அங்கு தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார் (மாற் 16 : 19) ஆம், பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின் வலது பாரிசத்திலே உட்கார்ந்தார் (எபி 8 : 1) அதாவது உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்தார். எபி 1 : 3.








**பாருங்கள், பரலோகத்தில் மூன்று சிங்காசனங்கள் வைக்க போதுமான இடமில்லாததால் ஒரு சிங்காசனத்தை மூவர் பங்கிட்டுக்கொண்டோ, இருவர் பகிர்ந்துக்கொண்டோ உட்காரவில்லை. மாறாக பல ஆயிரக்கணக்கான சிங்காசனங்கள் வைக்க போதுமான இடமிருந்தாலும், சிங்காசனத்திற்குரியவர் ஒருவராக இருந்ததால், ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது. அதில் அந்த சிங்காசனத்திற்கு உரியவர் மாத்திரமே அமர்ந்திருந்தார். தேவன் ஒருவரே. திரித்துவம், இருத்துவம் பிசாசே.**

ஆக, இப்பொழுது இயேசு தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். அதென்ன? இயேசு தம்முடைய மகிமையில் வீற்றிருக்கிறார். இதை தான் யோவான் : வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த சிங்காசனத்தின்மேல் ஒருவர் வீற்றிருந்தார் என்கிறான். வெளி 4 : 2. இப்பொழுது கவனியுங்கள் 24 மூப்பர்களும், 4 ஜீவன்களும் வணக்கமாய் விழுந்து : ஆமென், அல்லேலூயா, என்று சொல்லி சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் தேவனை தொழுதுக்கொண்டார்கள். ஆக பரலோகத்தில் உள்ள சிங்காசனத்தில் இயேசு மாத்திரமே தேவனாக உட்கார்ந்திருக்கிறாரேயன்றி அவருடன் இன்னும் இருவரே, ஒருவரோ கிடையாது. இப்பொழுது அவர் தேவனுடைய ஸ்தானத்தில் தம்முடைய மகிமையின் சரீரத்தில் அமர்ந்திருப்பதால் இனி அவர் உங்களுடன் தமது மாமிச சரீரத்தில் இடைப்படமாட்டார்.

24. ஆக சகோ. பிரன்காம், தன்னுடைய ஊழிய ஆரம்பரத்தில் நம்மை போன்று வேதவாக்கியங்களில் அதிக பழக்கம் இல்லாதவராகவே இருந்தார். இந்த தரிசனத்தை அவர் கண்டபோது அவர் பாப்திஸ்ட் சபையில் ஒரு மூப்பனாக இருந்தார். அதுதான் அவரது ஊழிய ஆரம்பமாகவும் இருந்தது. நாம் ஸ்தாபன சபை ஊழியர்கள் இயேசு தன்னுடன் அமர்ந்து உணவு உண்டதாகவும், படுத்து உறங்கியதாகவும், தன்னுடன் அமர்ந்து சம்பாஷித்ததாகவும் கற்பனை செய்து, தங்களை மக்கள் மேன்மையாக எண்ணுவதற்காக கூறுகிறார்கள். ஆக சகோ பிரன்காம் இந்த தரிசனம் ஸ்தாபன சபை ஊழியர்கள் இயேசு கிறிஸ்துவை வர்ணிப்பது போன்ற சாயலின் பிரம்மையே ஆகும். மேலும் இயேசுவின் முகபாவத்தை எந்த ஒரு ஓவியனாலும் வரையமுடியாது என்கிறார். ஆனாலும் அதே வேலையில் ஹாப்மேன் வரைந்த படம், தான் தரிசனத்தில் கண்ட இயேசுவின் முகத்தோடு

ஒப்பாகஇருக்கிறது என்கிறார். அதோடுமட்டுமல்ல, நான் எப்பொழுதும் என் வீட்டை விட்டு கடந்துச்செல்லும் போது, நானும் என் குடும்பத்தினருமாக ஜெபிப்போம். எங்கள் வீட்டு முன் அறையில் நான், என் மனைவி, பிள்ளைகள் அனைவரும் ஹாப்மேன் வரைந்த இயேசுவின் படத்தை நோக்கி நின்றவாறு சுற்றிநின்று ஜெபிப்போம் எனவும் His unfailing words of promise. என்ற செய்தியில் பத்தி 125ல் கூறுகிறார். செய்திநாள் 21.01.1964. பாருங்கள் அவர் அவ்வாறு செய்தார் என்பதற்காக நாமும் அதை பின்பற்றி ஹாப்மேன் இயேசு 33 வயது படத்தை நமது வீட்டுமுன்னறையில் தொங்கவிட்டு அந்த படத்திற்கு கனம், மகிமை, துதி செலுத்துவோமாகில் நம்மை போன்று பரிதபிக்கப்படத்தக்கவர்கள் யாரும் இல்லை. அது அவருடைய சொந்த காரியம். அது சபைக்கடுத்த உபதேசம் அல்ல. அவருடைய சொந்த காரியங்களுக்கு அவரே பொறுப்பு. நம்முடைய வாழ்க்கையில் நாம் ஒவ்வொருவரும் சில தனிப்பட்ட காரியங்களை உடையவராக இருக்கிறோம். அதற்கு நாமே பொறுப்பு. பாருங்கள் உதாரணமாக நான் நாடார் சமுதாயத்தை / குலத்தை / கோத்திரத்தை சேர்ந்தவன். நான் அதில் பெண்கொண்டு, பெண்கொடுக்கிறேன். இது என்னுடைய தனிப்பட்ட விஷயம். இதை நான் யார் மீதும் திணிக்கமுடியாது. எனது இந்த கொள்கைக்கு நான்தானே பொறுப்பு. அவ்வண்ணமாக யாரும் தங்களுடைய தனிப்பட்ட காரியங்கள் / கொள்கைகளை சபைமீது திணிக்கமுடியாது. **இந்த ஹாப்மேன் விஷயத்தில் சாத்தான் சபைக்குள் நுழைத்து மக்களை வஞ்சித்து அவர்களை விக்கிரகாராதனைக்குள்ளாக்கி விட்டான்.** மேலும் இங்கு நீங்கள் கவனித்தீர்களானால் இயேசுவின் முகபாவத்தை எந்த ஒரு ஓவியனும் வரைய முடியாது என்கிறார். ஆனாலும் அந்த ஹாப்மேன் வரைந்த படத்தை தன் வீட்டு முகப்பு அறையில் தொங்கவிட்டு அதன்முன் நின்று ஜெபிக்கிறார். இது சொல் ஒன்றும் செயல் ஒன்றும் உள்ளதாக தென்படவில்லையா? இப்படிப்பட்ட காரியங்களுக்கு அவரே பொறுப்பு. சகோ பிரன்காம் தன்னுடைய வாழ்க்கையில் அநேக தவறுகளை செய்திருக்கிறேன், செய்துக்கொண்டிருக்கிறேன், இனியும் செய்வேன் என்று கூறி தன்னை தாழ்த்துகிறார். தானும் தவறுகளுக்கு உட்பட்டவனேயன்றி தான் முற்றிலுமாக தவறுகளுக்கு அப்பாற்பட்டவன் என்று கூறவில்லை. இதுவும் அவர் செய்த ஒரு தவறு என்று நாம் ஏன் எண்ணிக்கொள்ளக்கூடாது? மேலும் The Phychological thought of it that He (Jesus) had a long hair. We have no record of that, that He ever had a long hair. We don't know என Sirs we would see Jesus. Long Beach. CA. Wednesday 08.02.1961 பத்தி 31ல் கூறுகிறார். அதாவது இயேசு நீண்ட தலைமயிரை உடையவராக இருந்தார் என்பது ஒருவருடைய அகஉணர்வுச்சார்பின் எண்ணமாயிருக்கிறது. அதாவது ஒருவருடைய யூகமாக, கருத்தாக, சிந்தையாக இருக்கிறது என்கிறார். ஆக இயேசு நீண்ட தலைமயிரை உடையவராக இருந்தார் என்பதற்கு ஆதாரங்கள் இல்லை என்று கூறிவிட்டு அவரே நீண்டு தலைமயிர் உடையவராக தான் தரிசனத்தில் கண்டேன் என்கிறார். ஹாப்மேன், இயேசு நீண்ட தலைமயிரை உடையவராகவே சித்திரம் தீட்டியிருக்கிறார். ஆக இந்த ஹாப்மேன் படம் விவகாரத்தில் அவர் காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது.

25. தேவன் தமது மகிமையில் காணப்பட்ட போது அவருடைய முகம் வல்லமையாய் பிரகாசிக்கிற சூரியனை போல் இருந்தது மத் 17 : 2, வெளி 1 : 16. பாருங்கள் தேவனுடைய முகத்தை எந்த மனுஷனும் கண்டு உயிரோடிருக்ககூடாது யாத் 33 : 10. ஆனால் அதே தேவன், தனது ஆவிக்குரிய மகிமையின் சரீரத்திலிருந்து, மாம்சசரீரத்தில் வெளிப்பட்டபோது அவருடைய முகத்தோற்றத்தை கண்டார்கள். அதோடு மட்டுமல்ல, அவமானத்துக்கும், உமிழ்நீருக்கும் தன் முகத்தை அவர் மறைக்கவில்லை என்று எழுதியிருக்கிறபடி ஏசா 50 : 6) அவருடைய முகத்தில் துப்பினார்கள். பாருங்கள் தேவனுடைய முகத்தை காணக்கூடாத மனுஷன், தேவனுடைய முகத்தை கண்டபோது அவருடைய முகத்தில் துப்பினான். பாருங்கள் இது எத்தனை அக்கிரமான, கொடுமையான செயல். ஆனால் தேவன் பொறுமையாகவே இருந்தார் (மத் 26 : 67) பாருங்கள் மனுஷனைப் பார்க்கிலும், அவருடைய முகப்பார்வையும், மனுபுத்திரரை பார்க்கிலும் அவருடைய ரூபமும் இவ்வாறு அந்தக்கேடு அடைந்தபடியினாலே, அவரைக்கண்ட அநேகர் பிரமிப்படைந்தார்கள் (ஏசா 52 : 14) இது குறித்து அவருடைய பாடுகளை மத் 26 : 67, 68, மத் 27 : 27, 30 வசனங்களில் தியானியுங்கள்.

26. முடிவில் அவர் மரித்து, அடக்கம்பண்ணபட்டு, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தபின்பு, 40 நாட்கள் தம்முடையவர்களுக்கு காணப்பட்ட பின்பு பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அவர் தன் பழைய மகிமையின் சரீரத்தை அடைந்தார். இனி நாம் அவரை அவருடைய மாம்சசரீரத்தில், தாவீதின் குமாரனாக அவர் ஆட்சிக்குவரும் வரை காணமுடியாது. அவர் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டபின், தாவீதின் குமாரனாக ஆளுகைக்கு வரும் இடைப்பட்ட காலகட்டத்தில் அவர் சபையை / தம்முடைய மணவாட்டியை எடுத்துக்கொள்ள வரும்பொது, அவர்இருக்கிற வண்ணமாகவே நாம் அவரை காண்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போம். ஆனால் அவர் எவ்விதமாக காணப்படுவார் என்று இன்னும் வெளிப்படவில்லை (1கொரி 3 : 2) பாருங்கள் மேலும் அவர் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டபின்பு அவருடைய முகத்தோற்றத்தை காணமுடியவில்லை. அவருடைய முகத்தோற்றத்தை அநேகர் கண்டதாகவும், அவரோடு முகமுகமாக பேசியதாகவும் கூறுவதெல்லாம் பிசாசின் வஞ்சிப்பு. **இனி நாம் இயேசு கிறிஸ்துவின் முகத்தோற்றத்தை அல்லது அவரது சரீரதோற்றத்தை மாம்சத்தில் அவர் தாவீதின் குமாரனாக வரும் வரை காணமுடியாது.**

27. அடுத்து ஏழு தூதர்களால் உண்டான விசித்திரமான மேகவளையத்ததை வெளியிட்டு, அதற்கு மேல் இயற்கைக்கு மேம்பட்ட மேகம் ஏழாம் முத்திரை எனகுறிப்பிட்டு, படத்தின் அடியில் பிப்ரவரி மாதம் 28ந் தேதி,




1963 அன்று சூரிய அஸ்தமன நேரத்தில் ஃபிளேஸ்டாப், அரிசோனாவின் மேல் இந்த மகத்தான மேகம் புகைப்படம் எடுக்கப்பட்டபோது, இது 26 மைல்கள் உயரமும் 30 மைல்கள் அகலமும் வாய்ந்ததாக இருந்தது. இப்புகைப்படமானது முதன்முறையாக மே 17, 1963 அன்று லைப் மேகஸின் பத்திரிக்கையில் அச்சிடப்பட்டது எனவும், இதன் கீழ் இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக எழுந்தருளிப்போனாரோ , அப்படியே மறுபடியும் வருவார் அப் 1 : 11 என கூறப்பட்டுள்ளது. (மார்ச் ஏப்ரல் பகுதி) இது மிகவும் தவறான ஒரு போதனை என்பதை **இயேசுவே வாரும் - சத்தியத்திற்கு விரோதமாய் பொய் சொல்லுகிற, போதிக்கிற, உபதேசிக்கிற ஞானம் லௌகிக சம்பந்தமானதும், ஜென்மசுபாவத்திற்குரியதும், பேய்த்தனத்திற்கடுத்துமாயிருக்கிறது.** பத்தி 42-50 வரை எழுதியுள்ளேன். இந்த காட்சி, கல்லறைகளும் திறந்தது, நித்திரையடைந்திருந்த அநேக பரிசுத்தவான்களுடைய சரீரமும் எழுந்திருந்தது. அந்த பரிசுத்தவான்களோடு உன்னதத்திற்கு ஏறிசென்ற இயேசு, மீண்டும் பரிசுத்தவான்களோடு இறங்கி வரவேண்டிய காட்சிக்கு (சகரி 11 : 5 க்கு) ஒப்பாகுமா? ஒரு முறை அல்ல, பலமுறை இதுகுறித்து சிந்தியுங்கள், பின் செயல்படுங்கள். இந்த போதனை பரத்திலிருந்து இறங்கி வந்த ஞானம் அல்ல.




28. அடுத்து ஏழு அகல்களை கொண்டஒரு குத்துவிளக்கை வரைந்து ஏழு அகல்களை, ஏழுசபை காலதூதர்களுக்கு ஒப்பிடுகிறார். அதன்கீழ் வெளி 1 : 20 ஐ குறிப்பிடுகிறார். மீண்டும் பழைய தவறையே செய்கிறார். வெளி 1 : 20 நீ கண்ட ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகளாகும் என கூறுகிறது. அதாவது யோவான் ஒன்று அல்ல, இரண்டு அல்ல, மாறாக ஏழு குத்துவிளக்குகளை கண்டான். அந்த ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகள் எனகூறப்பட்டுள்ளது. ஆனால் இவரோ ஒரு குத்துவிளக்கின் ஏழு அகல்களும் ஏழு சபைகாலங்கள் என குறிப்பிடுகிறார். ஏழு அகல்களை உடைய ஒரு குத்துவிளக்கை யோவான் காணவில்லை. (ஜுலை - ஆகஸ்ட் பகுதி) வேதவாக்கியங்களுக்கு இவரது கண்கள் மறைக்கப்பட்டிருக்கிறது. அப்படியானால் இவர் எப்படி கிறிஸ்துவின் மணவாட்டியை கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அவளவுக்கு தக்க பூரணபுருஷராக்க வழிநடத்தமுடியும்? முடியாது, ஒருகாலும் முடியாது. பாஸ்டர் ஊழியம் ஐந்து வகை ஊழியங்களில் ஒன்று அல்லவா. அந்த தகுதி இவரிடம் கிடையாது




29. ஓர் பரிபூரண மனிதனின் வளர்ச்சி. இதன் வலதுபக்கம் ஒரு நட்சத்திரங்களை போட்டு தூதர்கள் என குறிப்பிடுகிறார். இங்கு ஏழு நட்சத்திரங்களை வரைந்திருந்தால் நலமாயிருந்திருக்கும். ஒவ்வொரு தூதன் அருகிலும் ஒரு நட்சசத்திரம். அடுத்து இடது பக்கத்தில் சிலுவை ஒன்றை வரைந்து ஏழுசபைக்காலங்கள் எனக்குறிப்பிட்டுள்ளார். இங்கேயும் வேதவாக்கியங்களின் அடிப்படையில் ஏழு குத்துவிளக்குகளை வரைந்திருந்தால் நலமாயிருந்திருக்கும். ஏழு நட்சத்திரங்களுக்கு பதிலாக ஒரு நட்சத்திரத்தையாவது வரைந்திருப்பது தவறு என கூறமுடியாது. ஆனால் இடதுபக்கம் சிலுவைக்கு பதில் ஒரு குத்துவிளக்காவது தேவை. ஏனென்றால் சபைகாலங்கள் சிலுவைக்கு அல்ல மாறாக குத்துவிளக்குகளுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது. (செப்டம்பர் - அக்டோபர் பகுதி).

30. அடுத்து இதுவரை **இயேசு கிறிஸ்துவின் ஜெபவீடு** என்ற வீட்டிற்கு பாஸ்டர் ஜான் ஐசக் தலைவனாக இருந்து குடும்பத்தை கவனித்து வந்தார். இப்பொழுது **தெய்வீக அன்பு ஜெபஐக்கியம்** என்றதொரு சிறுவீட்டை துரைப்பாக்கத்தில் ஆரம்பித்துள்ளார். பாருங்கள் ஒரு மேய்ப்பனுக்கு ஒரு மந்தை. பல மந்தைகளுக்கு ஒரு மேய்ப்பன் என்பது வேதவாக்கியங்களின் அடிப்படையில் இல்லை. அதே போன்று ஒரு கணவனுக்கு / புருஷனுக்கு ஒரு வீடு. பலவீடுகளுக்கு




அவன் கணவனாக / புருஷனாக இருப்பானாகில் அவன் யாராக இருக்கமுடியும் என்பதை நீங்களே நிதானித்துக்கொள்ளுங்கள். பாருங்கள் மந்தை என்பது குடும்பம். ஆதலால் தான் மேய்ப்பன் குடும்பதலைவனுக்கு ஒப்பிடப்படுகிறான். இவ்வாறாக ஆங்காங்கு பல சிறுவீடுகளை வைத்துக்கொண்டு

ஆதிக்கம் செலுத்திவந்தார் மும்பை பாஸ்டர். சொல்லபோனால் அவரது ஊழியமே வேதவாக்கியங்களின் அடிப்படையில் இல்லை. இவர்களை போன்று அநேக கள்ளகபடமுள்ள வேலையாட்கள் ஆங்காங்கு பல கிளைசபைகளை ஏற்படுத்திக்கொண்டு தங்கள் ஆதிக்கத்தின் கீழ் தங்கள் எல்லைகளை விரிவுபடுத்தி ஒரு ஸ்தாபன நிலைக்கு சபைகளை கொண்டுவந்துவிட்டார்கள். இவ்வாறாக கிளைசபைகள் உருவாக்கி ஊழியம் செய்கிறவர்கள் ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்தவர்களே. ஆதலால் அவர்கள் சத்தியத்திற்கு தூணும் ஆதாரமுமாக நிற்க முடியாது.

31. **காலேப் யோசுவா : சபையில்லதவர் - பிறர் குற்றம் காண்பவர்.**
**நற்சான்றிதழ் கொடுத்தவர் : சென்னை சபை பாஸ்டர் ஐசக் வசந்தகுமார் அவர்கள்.**
**நேர்முகக்காணல் : சகோ. மாற்கு, வேடல், காஞ்சிபுரம் மாவட்டம்**

சமீப நாட்கள் ஒன்றில் என் கரங்களினால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்ற சகோதரன் மாற்கு அவர்கள் தன் மனைவி குழந்தைகளுடன் எதிர்பாராதவிதமாக என் வீட்டிற்கு நீண்ட இடைவேளைக்கு பின் வந்தார். சந்திப்பு மிக்க மகிழ்ச்சியாக இருந்தது. சம்பாஷனை வேளையில் தான் ஒரு முறை குடும்பத்துடன் சென்னை சபைக்கு சென்றிருந்ததாகவும், சுமார் 700 / 800 பேர் கூடுகிறார்கள், முற்றிலுமாக குளிர்சாதன வசதிக்கொண்ட ஆராதனை ஸ்தலம், பாடல்கள் கேட்க மிக இனிமையாக இருந்தது, செய்தி பரவாயில்லை, குறைகூறவும் முடியாது என கூறினார். சபை முடிவில் பாஸ்டர் அவர்களை சந்தித்ததாகவும், நான் சகோ. காலேப் யோசுவாவிடம் ஞானஸ்நானம் பெற்றவன் எனக்கூறி தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டாராம். மேலும் என்னை குறித்து பேசும்போது பாஸ்டர் அவர்கள் எனக்கும் சகோ. காலேப் யோசுவாவிற்கும் ஐக்கியம் கிடையாது. அவரது போக்கு சரியில்லை என்று கூறினார்களாம். விவரம் கேட்க, முதலாவது காலேப் யோசுவாவிற்கு சபை கூடுதலுக்கு இடம் இல்லை. அவர் சபைகூடுதலுக்கு எங்கும் செல்வதில்லை. சபை கூடுதல் மிக்க அத்தியாவசியம். இரண்டாவது அவர் அனைவரையும் குறைகூறிக்கொண்டே இருக்கிறார். இந்த போக்கு சரியில்லை. யாரைத்தான் விட்டுவைக்கிறார்? அப்படியானால் இவரை தவிர மற்றவர்கள் குறையுள்ளவர்களா என என்மீது சாடினார்களாம். அப்பொழுது அந்த சகோதரன் சபையில் நடக்கும் முறைகேடுகளை, ஊழியர்கள் செய்யும் தவறுகளை, தவறான உபதேசங்களை சுட்டிக்காட்டித்தானே எழுதுகிறார். அது ஒரு ஊழியக்காரனுடைய கடமையல்லாவா? தவறைசுட்டிக்காட்டும்போது நீங்கள் அவர் எப்படி அனைவரையும் குற்றப்படுத்துகிறார் என கூறுகிறீர்கள் என்று சகோ. மாற்கு கேட்டதற்கு அவர் சரியான விளக்கம் கொடுக்காமல் நீங்கள் என்ன என்னிடம் கேள்விகள் கேட்கவா வந்திருக்கிறீர்கள் என கூறி சம்பாஷனைக்கு ஒரு முற்றுபுள்ளி வைத்துவிட்டார்களாம்.

32. பாருங்கள் கர்த்தர் தமது சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய ஐந்துவகை ஊழியங்களை ஏற்படுத்தினார். அதில் சுவிசேஷகன் ஒருவன். இவர்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய ஏற்படுத்தப்பட்டவர்களேயன்றி சென்னை சபை, கல்வாரிசபை, கல்வாரி ஜெபவீடு, இயேசு கிறிஸ்துவின் ஜெபவீடு பக்திவிருத்தியடைய ஏற்படுத்தப்படவில்லை. கிறிஸ்துவின் சரீரமாகிய சபை ஒரு காணக்கூடாத சரீரம் (Mystical Body) ஆனால் மேற்கூறிய சபைகள் யாவும் லோக்கல் சபைகள். காணக்கூடாத சாரீரத்தில் விசுவாசிகள் மாத்திரமே உண்டு. இந்த காணக்கூடிய லோக்கல் சபைகளில் மீன், நண்டு, நத்தை, பாம்பு எல்லாம் உண்டு. அதாவது விசுவாசிகள், அவிசுவாசிகள், பாவனைவிசுவாசிகள் உண்டு. பாருங்கள் இந்த லோக்கல் சபைகளில் விசுவாசிகளும் உண்டு. ஆனால் அவர்கள் தங்கள் ஆவி ஆத்துமாவில் காணக்கூடாத சபையை சார்ந்தவர்களாக இருப்பார்கள். மற்றவர்கள் தாங்கள் காணும் சபை மீது பற்றுள்ளவர்களாக / பாஸ்டர் வணக்கத்தில் இருப்பார்கள். கழுகுகுஞ்சு போன்ற விசுவாசி, கோழிகுஞ்சுகள் மத்தியில் இருக்கிறாள். காலம் வரும்போது பறந்துசென்றுவிடுவாள். ஆக இந்த லோக்கல் சபைகளில் ஆங்காங்கு காணப்படும் விசுவாசிகளின் பக்திவிருத்திக்காகவே கர்த்தர் இந்த ஐந்துவகை ஊழியங்களை வைத்திருக்கிறார். இதில் பாஸ்டர் மட்டும் ஒரு குறிப்பிட்ட சபைக்கு உட்பட்டவர். அவர் ஒரு குடும்பத்திற்கு மாத்திரமே தலைவர். அவர் பல சின்னஞ்சிறு குடும்பங்களை ஆங்காங்கு வைத்துக்கொண்டு ஆதிக்கம் செலுத்தகூடாது. இப்பொழுது இதர நான்கு வகை ஊழியங்களும் பொதுவானவைகள். இவர்களுக்கென்று பிரதேகமான ஒரு லோக்கல் சபை கிடையாது. கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்தி விருத்தியடைய தேவனால், ஐந்து வகை ஊழியத்தில் ஒன்றான சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவன், ஏதோ ஒரு லோக்கல் சபையில் சென்று, கைகட்டி அமர்ந்து, பாஸ்டர்கள் உபதேசத்தை கேட்டு வருவதா அவன் பணி? சென்னை சபை பாஸ்டர் சுயநினைவில் தான் இருக்கிறாரா? மாறாக இவர்கள் அனைத்து சபைகளுக்கும் சென்று தங்கள் பணிகளை அங்குள்ள விசுவாசிகள் பக்திவிருத்தியடைய போதித்துவருகிறார்கள். பாருங்கள் அன்று சுவிசேஷகனாகிய பிலிப்பு, தீமோத்தேயு, ஸ்தேவான் போன்றவர்கள் எந்த ஒரு குறிப்பிட்ட சபைக்கு, சபைகூடுதலுக்காக சென்றுவந்தார்கள்? இவர்கள் சபை அனைத்துமீதும் உரிமைக்கொண்டவர்களாக, சபைகள் அனைத்திற்கும் சென்றுவந்தார்கள். ஆதலால் பிரியமான பாஸ்டர் ஐசக் வசந்தகுமார் அவர்களே நீங்கள் காலேப் யோசுவாவை ஒரு லோக்கல் சபைக்குள் கட்டுப்படுத்தமுடியாது. அது உங்களால் கூடாது. அவர் அனைத்து சபைகளுக்கும் உரிய ஒரு ஊழியக்காரன். ஆனால் நீங்கள் அவரை அங்கீகரிப்பது இல்லை. அவரை உங்கள் சபைகளில் ஏற்றுக்கொள்வதில்லை. ஒவ்வொரு சபையில் வாசல்களும் அவருடைய முகத்திற்கு விரோதமாக மூடப்படுகிறது. ஏனென்றால் அவர் உங்களது தவறான போதனைகளை, நடத்தைகளை சுட்டிக்காட்டுகிறார். அதை நீங்கள் விரும்புவதில்லை. நான் உங்கள் சபைக்கு வந்தேன். உங்கள் தவறை சுட்டிக்காட்டினேன். சபை

முடிந்தவுடன், நல்ல ஆகாரம் கொடுத்து, என்னை மிரட்ட / என்னை இழிவாக பேச ஆட்களை வைத்து நாடகம் ஆடினீர்கள். இதுதானா ஒரு பாஸ்டரது பண்பாடு? நன்றாக சென்னை, கோடம்பாக்கத்தில் இயங்கிக்கொண்டிருந்த வில்லியம் பிரன்காம் குட்நியூஸ் சொசைட்டியை உங்களது சாதுரிய ஞானத்தினால் மூடவைத்தீர்கள். கட்டிடத்தை விற்றீர்கள். அதன்பின் நடந்தது என்ன? உங்கள் இடத்திலேயே, உங்கள் பக்கத்திலே பெரியார் நகரில் புதிய கட்டிடம் கட்டி செய்திகளை பிரிண்ட செய்ய ஏற்பாடுகள் செய்து வருகிறீர்கள். இதுதான் உங்களது நாடகம். முடிவாக சகோதரனே நீங்கள் கிறிஸ்துவின் சரிரமாகிய சபை பக்திவிருத்தியடைய தேவனால் ஏற்படுத்தபட்ட ஐந்து வகை ஊழியத்தில் பாஸ்டர் பணியில் இல்லை. உங்களது நடத்தைகள் அதை எடுத்துக்காட்டுகிறது. ஆதலால் தான் ஐந்துவகை ஊழியத்தைபற்றி உங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. உங்களிடம் வந்த சகோதரன் உங்கள் சபையில் 700 / 800 பேர் கூடுகிறார்கள் என பெறுமை படலாம். ஆனால் எனக்கு அது ஒன்றுமே இல்லை. நான் ஒரு பெரிய கூட்டத்தை எதிர்பார்ப்பதில்லை. அங்கு தேவனுடைய வார்த்தை காணப்படுகிறதா, அங்கு ஆவியின் கனிகள் காணப்படுகிறதா என்பதையே காண விரும்புகிறேன். மேலும் ஒருவர் பின் 100 போரோ அல்லது 400 பேரோ இருந்தால் அவர் என்ன தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்ட, ஏற்படுத்தப்பட்ட பாஸ்டர் ஆகி விடுவாரா? சபைகளில் உள்ள எண்ணிக்கைகளை கொண்டு அவர் தேவனால் ஏற்படுத்தப்பட்ட பாஸ்டர் எனக்கூறமுடியாது. நமக்கு வேதவாக்கியங்களில் எடுத்துக்காட்டாக இரு உதாரணங்கள் உள்ளன. ஒரு பாஸ்டர் தெயுதாஸ், அடுத்த பாஸ்டர் யூதாஸ். இந்த இரு பாஸ்டர்களும் நம்முடையவர்கள் போன்று தங்களை ரொம்ப அலட்டிக்கொண்டார்கள். தங்களை பின்பற்றும்படி அநேகரை வசிகரித்தார்கள். முடிவில் அவர்கள் மடிந்து / அழிந்துப்போனார்கள். அவர்களை நம்பியிருந்த அனைவரும் சிதறடிக்கப்பட்டார்கள். இந்த சம்பவத்தை நீங்கள் அப். 5 : 36 - 38 வசனங்களில் தியானிக்கலாம்.

33. உங்களது அடுத்த குற்றசாட்டுக்கு பதிலாக கீழே ஒரு ஸ்தாபன ஊழியக்காரர் எழுதியுள்ள கடிந்துக்கொள்ளுதலை பிரசுரித்திரிக்கிறேன். அவரிடம் காணப்படுகிற அந்த பகுத்தறியும் தன்மை உங்களிடத்தில் காணப்படவில்லையே என அறிந்து, மனம் வருந்துகிறேன். கீழ்கண்ட தலைப்பில் உள்ள பாகம் சகோ. சாம்சன் பால் அவர்களை ஆசிரியராக கொண்ட **ஜீவநீரோடை** என்ற தினசரி தியானபுத்தகத்திலிருந்து **ஜாமக்காரன்** ஆசிரியர் டாக்டர் புஷ்பராஜ் அவர்கள் எடுத்து கையாள, நான் அதிலிருந்து எடுத்து, அது உங்கள் அறியாமையை தெளிவுபடுத்தும் என்ற நல்ல நோக்கத்தோடு எழுதுகிறேன்.

**34. தவறுகளைச் சுட்டிக்காட்டுவது தகுதியற்ற செயலா ?**

**கடைசி காலம். உலகத்தில் மட்டும் அல்ல, ஆவிக்குரிய உலகத்திலும் அங்காங்கே வேதத்தில் தெளிவின்மை, உண்மை நிலை அறியாமை ஆகிய கார்மேகங்கள் சூழ்ந்து நிற்கின்றன. உண்மையான உபதேசத்தையும் உண்மையான ஊழியங்களையும் பகுத்தறிய இயலாத அந்தகாரத்தில் மக்கள் தவிக்கன்றனர். எனவே அநேகருடைய இறைவாழ்க்கை கனியற்றதும், எளிதில் காய்ந்து போகிறவைகளுமாகக் காணப்படுகின்றன. பெரும்பாலான ஊழியர்கள் மக்களை பரவசப்படுத்த முன்னிற்கிறார்கள். பக்குவப்படுத்துவதிலோ மிகவும் பின்னால் நிற்கிறார்கள். நடனம் ஆட கற்றுக் கொடுக்கும் ஆர்வத்தில் கொஞ்சம் கூட நடைமுறை கிறிஸ்தவ வாழ்க்கை வாழ கற்றுக் கொடுப்பதில் இல்லை. சபை உறுப்பினர்கள் பெருக்கத்திலும், காணிக்கை வரவின் பெருங்கத்திலும் காண்பிக்கும் அக்கரையில், பத்தில் ஒன்றைக் கூட விசுவாசிகளை இயேசுவின் சீடர்களாக மாற்றுவதில் காண்பிக்கவில்லை. உணர்ச்சிகள் தூண்டப்பட்டதால் எழுந்த பரவசங்களையும், உடல் பிரகாரமாகத் தோன்றிய உற்சாக நிலைகளையும் ஆவியின் அபிஷேக மழை என்று சொல்லி நெடுங்காலமாக பல ஊழியர்கள் மக்களை எங்கேயோ கொண்டு செல்கிறார்கள். பொய்யான உபதேசங்களின் அலங்கார அணிவகுப்புகளால் மயங்கிய பலர் உண்மை உபதேசங்களை உதவாத உபதேசங்கள் என்று சொல்லி உதாசீனம் செய்கிறார்கள். தவறான உபதேசங்களையும், தவறான விதத்தில் செய்யப்படும் ஊழியங்களையும் கண்டு மனம் நொந்து "அது தவறு" என்று கபடமற்ற மனதில் சொல்கிறவர்களும், எழுதுகிறவர்களும் வெகு சிலரே. அந்த வெகு சிலருக்கும் அந்திக் கிறிஸ்துவின் ஆவி, குறைகூறும் ஆவி, குற்றம் சாட்டும் ஆவி, பொறாமையின் ஆவி, பரிசேயர்களின் ஆவி என்ற பட்டங்கள் பெரும்பான்மையினரால் உடனே சூட்டப்பட்டு விடுகிறது . அதன் மூலம் அவர்கள் விசுவாசிகள் மத்தியில் ஆகாதவர்களாகவும், தேவனுக்கு எதிரானவர்கள் போலவும், அக்கிரமக்காரர்கள் போலவும் காண்பிக்கப்படுகிறார்கள்.**

**35. இயேசு நல்லவர், இயேசு அன்புள்ளவர், மனதுருக்கம் உள்ளவர் என்பது போன்ற இலகுவான வார்த்தைகளை மட்டுமே பேசு வேண்டும். வேறு யாரையும், எதையும் கண்டு கொள்ளாமல் கண்ணை மூடிக் கொள்ள வேண்டும். அதுதான் உண்மை ஊழியம். அவர்தான் நல்ல ஊழியர். இது இன்று பலரால் பேசப்படும் ஊழிய சிந்தாந்தம். ஆனால் இது சரியா? மனதுருக்கம் மட்டும்தான் இயேசுவின் ஊழியமா? மாய்மாலமான மனசாட்சியற்ற ஊழியங்களை தவறு என்று சொல்வது ஊழியத்தின் ஒரு பகுதி இல்லையா? பரிசுத்த ஆவியில் நிறைந்தவர் இயேசு. அந்த ஆவியினால் உருவாகிய மனதுருக்கத்தால் மக்களுக்காக பரிதவித்தார். அவர்களை சுகமாக்கினார். அழுகிறவர்களோடு சேர்ந்து அழுதார். ஆனால் அடுத்தப் பக்கத்தைப் பாருங்கள்.அதே ஆவியினால் உருவாகிய வைராக்கியத்தால் மாய்மாலமும், மதிகேடும் நிறைந்த பரிசேயர்களின் முகத்திரைகளைக் கிழித்தார். தவறான பாரம்பரிய உபதேசங்களை கண்டித்துப் பேசினார். உள்ளத்தில் கள்ளத்தையம், கபடத்தையும், பொருளாசையையும் வைத்துக் கொண்டு, வெளியில் தேவ மனிதர்களாக வேடமிட்ட மதத்தலைவர்களை விரியன் பாம்புக் குட்டிகளே வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளே ஏன்றார். அவர்களுடைய தவறான உபதேசம் என்னும் புளித்த மாவிற்கு எச்சரிக்கையாயிருக்கும்படி சீடர்களுக்கு எச்சரிக்கையும் விடுத்தார். இன்று அதேவிதமாக இயேசு செயல் படமாட்டாரா? இன்று அவர் தவறாக**

**செய்யப்படும் ஊழியர்களையும், மக்களை ஏமாற்றுகிற மாய்மாலக்காரர்களையும் அன்று போலவே கண்டிக்க மாட்டாரா ? (நிச்சயமாக செயல்பட்டுவருகிறார். ஏனென்றால் இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்று மாறாதவராயிருக்கிறார். சகோ. கா.யோ)அப்படி செய்ய விரும்பும்போது ஏதாவது ஒரு ஊழியர் வழியாகத்தானே அவர் அதைச் செய்வார். அப்படி யாராவது எழும்பி உண்மையை சொன்னால்"ஐய்யய்யோ... கர்த்தரின் ஊழியரை குறை கூறுகிறார்களே" என்று கூக்குரல் இடுவது சரியா? கர்த்தரின் தாசன் தாவீது, அபிஷேகிக்கப்பட்ட மன்னன் அவன். அவனைப் பார்த்து "நீயே அந்த பொல்லாத மனுஷன் " என்று நாத்தான் தீர்க்கத்தரிசி முழங்கவில்லையா? பவுல் அப்போஸ்தலன் ஆவியில் நிறைந்த ஊழியன். அவன் இயேசுவின் அன்பை மட்டுமா பிரசங்கித்தான்? வேதத்திற்கு விரோதமாக எழுந்த போலி ஊழியர்களை கள்ள அப்போஸ்தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள், தங்களுக்குரியவைகளைத் தேடுகிறவர்கள், ஒளியின் தூதனின் வேஷம் தரித்தவர்கள் என்றெல்லாம் கண்டனம் பண்ணிக் கடிந்து கொள்ளவில்லையா?**

**36. சத்தியத்தில் போதிக்கப்பட்டவன், சத்தியத்திற்காய் வைராக்கியமுள்ளவன் தன்னைச் சுற்றி நடக்கும் போலித்தனங்களைக் கண்டு கொள்ளாமல் சும்மா இருக்க இயலாது. யாருக்கும் தொந்தரவு இல்லாமல் இருக்க விரும்பி சத்தியத்தைக் குறித்து தாகமற்று இருப்பவர்கள் உண்மை ஊழியர்கள் அல்ல. அது தங்கள் சுய நிலைகளை எதிர்ப்பின்றி வளப்படுத்த விரும்புகின்றவர்களின் வெளிவேடமான தந்திரம். தேவனின் உண்மைகளுக்காக பக்தி வைராக்கியம் கொண்டவன் பினகாசைப் போல ஈட்டியோடு பாய்வதை தவிர்க்க முடியாது. அதில் உண்மையுள்ளவர்கள் யாரும் காயப்படமாட்டார்கள். அப்படிப்பட்டவன் நானூறு தீர்க்கத்தரிசிகளின் பந்தியில் தானும் ஒருவனாக இருக்க விரும்ப மாட்டான். தனியாக சிறையில் வாட நேர்ந்தாலும் அவன் தேவனுக்காக மிகாயாவைப் போல உறுதியுடன் நிற்பான். ஏன்? அவனுக்கு பெரிய எதிர்பார்ப்புகள் இல்லை. யாருடைய முகஸ்துதிகளும் பொருளுதவிகளும் அவனுக்கு இயேசுவை விட பெரிதாகத் தெரிவதில்லை. அவனை ஒருவேளை இந்த உலகம் ஏற்றுக்கொள்ளாமல் போகலாம். பெரியவர்களின் பின்பலம் அவனுக்கு இல்லாமல் போகலாம். ஆனால் அவனுடைய சத்தியமே அவனுக்கு போதுமான பலமாக இருக்கும். அவனை அழைத்த தேவனால் அவருடைய ஆவியினால் அவன் பெறும் அங்கீகாரம் எல்லா மனிதர்களின் அகங்காரங்களையும் ஒருநாள் அவமாக்கிபோடும் (சகோ. சாம்சன் பாலுக்கும், சகோ. டாக்டர். புஷ்பராஜ் அவர்களுக்கும் என் நன்றி)** வில்லியம் பிரன்காம், பிரன்காம் எனகூறித்திரியும் ஊழியர்களே, விசுவாசிகளே நீங்கள் மேலே கண்ட ஒரு ஸ்தாபன ஊழியரின் அறிவுரையை படித்த பின்பும் திருந்தாவிட்டால் உங்களுக்குள் தேவனுடைய ஆவியே இல்லை மாறாக பிசாசினால் வழிநடத்தப்படுகிறீர்கள்.

37. **மணவாட்டி ஊழியம் தேவசித்தத்திற்கு புறம்பான ஊழியம்**

2013 ஜனவரி நான்காவது வாரத்தில் ஒரு நாள் மணவாட்டி ஊழியம் என்றால் என்னவென்று அதன் அர்த்தம் புரியாது தங்களது ஊழியத்தை **மணவாட்டி ஊழியம்** என அழைத்துக்கொள்ளும் சகோதரர்கள் வெளியிட்ட தமிழ் மொழிப்பெயர்ப்பு செய்தி **காலத்திற்கு அப்பால்** எனது கரங்களில் கிடைத்தது. ஏழாம் சபைக்கால தூதனுடைய செய்திகளை ஆங்கிலத்திலிருந்து தமிழில் ஏனோ தானோ என்று மொழிப்பெயர்த்து வெளியிடுவது தான் மணவாட்டி ஊழியமாக (வெளி.22 : 17) தெரிகிறது. அட்டையில் முன்பக்கம் உரைக்கப்பட்ட வார்த்தையே மூலவித்து, காலத்திரைக்கு அப்பால், Beyond the curtain of time. 63-03-05 ஏழாம் தூதன் வில்லியம் மாரியன் பிரன்ஹாம் என இருந்தது. உரைக்கப்பட்ட வார்த்தையே மூலவித்து என்ற பதத்தை எடுத்துவிட்டு உள்ளே முதற்பக்கத்தில் உள்ள Semons by William Marrion Branham "in the days of the voice of the seventh angel" Rev. 10 : 7 என்ற வார்த்தையின் பின் பகுதியை மேலே போட்டு, மத்தியில் காலத்திரைக்கு அப்பால் Beyond the curtain of time 61-03-05 எனவும், கீழே முன்பகுதியை போட்டு இருந்தால் அது வேதவாக்கியங்களின் அடிப்படையில் நலமாகஇருந்திருக்குமே என தோன்றுகிறது.

38. அடுத்து உள்ளே சென்ற போது, மீண்டும் அங்கு Bride ministry (Rev 22 : 17) என்பதை கண்டேன். அது எனக்கு மிக்க துக்கமாக இருந்தது. மணவாட்டி ஊழியம் என்பது ஏழாம் சபைக்கால தூதனுடைய சபைக்கடுத்த செய்திகளை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிப்பெயர்ப்பது இல்லை மாறாக அது கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட ஐந்து வகை ஊழியங்கள் ஆகும். இது குறித்து ஏற்கனவே எழுதியுள்ளேன். ஆக மணவாட்டி ஊழியம் என்று கூறிக்கொண்டு, மணவாட்டி ஊழியம் என்பது எது என அறியாமல், மணவாட்டி ஊழியத்தை தூஷித்து வருகிறார்கள். ஆக ஒரு அதிருப்தியுடன் செய்தியை படிக்க தொடர்ந்தேன். இந்த செய்தி ஆங்கிலத்தில் Vol. : 33 : 5 ல் உள்ளது. அதில் கொடுக்கப்பட்ட பத்திகளின் படி இவர்கள் பின்பற்றியிருந்தால் நலமாயிருந்திருக்கும். அதை விட்டுவிட்டு இவர்கள் தங்களுக்கென்று ஒரு கோணலானவழியை தெரிந்துகொண்டார்கள். இதனால் ஆங்கிலம் மற்றும் தமிழ்பத்திகளை சரிசெய்து படிப்பது, ஏதோ ஒரு குறிப்பிற்காக ஆங்கிலத்தையும் தமிழையும் இணைத்து பார்ப்பது மிக்க கஷ்டமாக இருக்கிறது. ஆங்கில பத்திகள், தமிழ் பத்திகள் ஒன்று போல இருந்தால் அது குறிப்பு எடுப்பவர்களுக்கு இலகுவாக இருக்கும். எப்பொழுதுமே ஒரு ஒழுங்குமுறையை கடைபிடிப்பது மணவாட்டி ஊழியத்திற்கு மிக்க கஷ்டமாக தெரிகிறது. மற்றவர்களை குழப்பவேண்டும் என்பதே மணவாட்டி ஊழியமாக தெரிகிறது.

39. செய்தியை தொடர்ந்து படித்துக்கொண்டே வந்தேன். சுறுசுறுப்பாக இருந்தது. 16வது பக்கத்தில் பத்தி 38 ஐ படிக்க ஆரம்பித்தபோது ஏதோ ஒன்று இங்கு தவறு என உணர்ந்தேன். அங்கு, "அங்கே அதிகமான எண்ணிக்கையுள்ள ஜனங்கள் இருந்தார்கள். அவர்கள் **அழுதுகொண்டே** என்னிடமாய் ஓடிவந்து, "ஓ,

என்னுடைய விலையேறப்பெற்ற சகோதரனே என்றார்கள்" என்பதாக மொழிபெயர்க்கபட்டிருந்தது. நலமான காரியத்தில் நாம் எப்படி ஒருவரை அழுதுகொண்டு வரவேற்கமுடியும்? சகோ. பிரன்காம் இப்படி கூறியிருப்பாரா? என்ற சந்தேகம் என் உள்ளத்தில் எழுந்தது. ஆங்கில பிரதிக்கு சென்றேன். அங்கு They came running to greet me crying Oh, our precious brother என எழுதியிருந்தது. இவர்கள் crying என்பதை அழுதுகொண்டு என மொழிப்பெயர்த்துவிட்டார்கள். அது தான் அங்கு தவறு என உணர்ந்தேன். இந்த சமயத்தில் crying என்பது அழுகை என்ற பொருளை கொடுக்காது. செய்தியை மொழிப்பெயர்த்திருக்கும் நபருக்கும் இந்த செய்திக்கும் சம்பந்தமே இல்லை என உணர்ந்தேன். பாருங்கள் இந்த பகுதியை **புறக்கணிக்கப்பட்ட ராஜா** 33வது பக்கத்தில் முதல் பத்தியில் **"ஓ, எங்கள் விலையேறப்பெற்ற சகோதரனே என்று ஆர்ப்பரித்தார்கள்"** என மொழிபெயர்த்துள்ளார்கள். இது தான் சம்பவத்தை அறிந்து / உணர்ந்து கொடுக்கப்பட்ட சரியான அர்த்தம். ஆக இங்கு crying என்ற சொல்லுக்கு அழுகை என்ற அர்த்தம் இங்கு பொருந்தாது. மாறாக ஆர்பரிப்பு என்பதே சரியான மொழிப்பெயர்ப்பு.

40. சுறுசுறுப்பாக படித்துக்கொண்டு வந்த உள்ளத்தில் ஒரு ஏமாற்றம். ஆனாலும் மேற்கொண்டு படிக்கலானேன். 19வது பக்கத்தில் 45 வது பத்திக்கு வந்தேன். அங்கு "ஒரு நாளில் உம்மிடத்தில் அவர் வருவார், நீர் ஒரு **நடத்துனராக** அனுப்பப்பட்டிருக்கிறீர்" என எழுதியிருந்தது. இது என்ன? அமெரிக்கா பஸ்களில் நடத்துநர் ஊழியமா சகோ. பிரன்காம் செய்துவந்தார்? ஆங்கிலத்தில் You are sent as leader என இருந்தது. Leader க்கு நடத்துனர் என மொழிப்பெயர்த்துள்ளார்கள். இது எதை குறிக்கிறது? இவர்கள் செய்தியை மொழிப்பெயர்க்க முற்றிலுமாக தகுதியற்றவர்கள் என உணர்ந்தேன். **"நீர் வழிகாட்டிக்கொண்டு நடத்திசெல்பவராக அனுப்பப்பட்டிருக்கிறீர்"** எனஇருந்தால் அது எவ்வளவு பொருத்தமாக இருந்திருக்கும். ஏனோ தானோ என்ற மொழிப்பெயர்ப்பு. சம்பவத்தை கருத்தில் கொண்டு அதற்கேற்றவாறு மொழிபெயர்க்கும் தகுதியற்றவர்கள் மணவாட்டி ஊழியம் என்பதை உணர்ந்தேன். மொழிப்பெயர்ப்பு முற்றிலுமாக இவர்களது பணி அல்ல.

41. ஆக கொஞ்சம் கொஞ்சமாக இந்த செய்தியை படிக்கும் ஆர்வம் குறைந்துக்கொண்டே வந்தது. ஆனாலும் தவறுகளை கண்டு எழுதுவது பொதுவாக அனைத்து விசுவாசிகளுக்கும் பிரயோஜமாக இருக்கும், மற்றபடி அவர்கள் தவறான கருத்தோடு செய்தியை தியாணிப்பார்களே என்ற எண்ணத்தில் மீண்டும் தொடர்ந்து படிக்கலானேன். பக்கம் 23 ல் 54 பத்தி முடிவுக்கு வந்தேன். எனக்கு இந்த செய்தி மொழிப்பெயர்ப்பை உடனே தீயிட்டு கொளுத்தவேண்டும் என்ற எண்ணம் என் உள்ளத்தில் உதித்தது. கர்த்தருக்குரிய தசமபாகத்தை இப்படியாக ஏனோ தானே என்று மொழிபெயர்த்துவரும் நபர்களுக்கு கொடுத்து, தேவனை கொள்ளையிடுகிறார்களே, இவர்களை என்ன என்று சொல்வது என மிக்க மனம் நொந்து போனேன். பாருங்கள் இந்த நபர் மொழிப்பெயர்க்கிறார், There's nothing wrong with God என்ற பதத்திற்கு **தேவனிடத்தில் ஏதோ தவறு இருக்கிறது.** தேவனிடத்தில் தவறு இருக்கிறது என மொழிப்பெயர்க்கும் போது இந்த நபருக்கு உள்ளத்தில் ஒரு தெய்வீத பயம் ஏற்படவில்லையா? மதிமயங்கியா இப்படி மொழிப்பெயர்த்துள்ளார்? பிரியமானவர்களே இது மணவாட்டி ஊழியமே அல்ல. மாறாக இது மணவாட்டி ஊழியம் என்ற போர்வையில் இயங்கிவரும் பிசாசின் ஊழியம் ஆகும். இந்த ஊழியத்தை ஆதரிப்பவர்கள் அன்று யோசபாத், துன்மார்க்கனாகிய ஆகாப்புக்கு துணை நின்று கர்த்தரை பகைத்தது போன்ற காரியமாகும். 2 நாளா 19 : 2 இந்த மொழிப்பெயர்ப்பை நினைத்து பார்க்க பார்க்க மனம் கொதிக்கிறது. இப்படிப்பட்ட ஊழியத்தையும் ஆதரிக்க ஜனங்கள் இருக்கிறார்களே என்று நினைக்கும் போது, அவர்கள் அந்த அக்கிர செயல்களுக்கு துணை போவதாகவே தோற்றுகிறது.

42. மிக்க மனச்சோர்வுடன் மேலும் செய்தியை படிக்க தொடங்கலானேன். பக்கம் 30 ல் 75 வது பத்திக்கு வந்தேன். And remember, Embrace that picture, By His stripes we were healed என்ற ஆங்கில பகுதியை (ஆங்கிலத்தில் 84வது பத்தி) "அந்த படத்தை அனைத்துக்கொள்ளுங்கள். அவருடைய தழும்புகளால் குணமானோம்" என்றிருந்தது. எந்த படத்தை? இயேசு 33 வயதில் எப்படியிருந்தார் என ஹாப்மேன் வரைந்த படத்தையா? அல்லது ஏழு தூதர்களால் உண்டான மேகவளையத்திற்கு கண், மூக்கு, வாய் கொடுத்து மணவாட்டி ஊழியம் வரைந்த படத்தையா? அல்லது ஸ்தாபன சபைகள் இயேசு கிறிஸ்து என கூறி ஆராதித்து வரும் பற்பல படங்களில் ஒன்றையா? Picture என்றால் படம் என்ற பொருள்தானா? நினைவிற் கொள்ளுங்கள், **"அவருடைய தழும்புகளால் நாம் குணமானோம் என்ற காட்சியை இறுகப்பற்றிக்கொள்ளுங்கள்"** என்று மொழிப்பெயர்த்திருந்தால் அது மிக்க பொருத்தமாக இருந்திருக்கும் அல்லவா. படத்தை அனைத்துக்கொள்ளுங்கள் என்பதற்கும், அந்த காட்சியை இறுகப் பற்றிக்கொள்ளுங்கள் என்பதற்கும் வித்தியாசம் இல்லையா?

43. மேலும் மேலும் தவறுகளை காண காண செய்தியை தொடர மிக்க வெறுப்புள்ளவனாக எப்படியாவது படித்து முடிப்போம் என தொடர்ந்தேன். பக்கம் 31 ல் 77 வது பத்திக்கு (ஆங்கிலம் 88) வந்தேன். மனம் மேற்கொண்டு செல்லவில்லை. கடிகாரமுள் நின்றுவிட்டது. அது நகரவில்லை. உடனே ஆங்கில பகுதிக்கு சென்றேன். The thing, way God heals, is on the basis of service to Him, See ? it's on the basis of service to Him, we must accept our healing onthe basis, of, we will serve him after we are healed. இதை

இவர்கள் "அவருக்கு ஊழியம் செய்தவதின் அடிப்படையில், நாம் சுகத்தை பெற்றுக்கொண்டபிறகு அவருக்கு ஊழியம் செய்வோம் என்ற அடிப்படையில் தான் நாம் சுகத்தை பெற்றுக்கொள்ளவேண்டும்" என இருந்தது. தேவனிடத்திலிருந்து சுகம் பெறுவதற்கு நாம் அவருக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்ற ஒரு நிபந்தனை வேதவாக்கியங்களில் எங்கு இருக்கிறது? **"தேவன் நமக்கு சுகத்தை கொடுக்கும் வழி நாம் அவரை எவ்வகையில் நோக்கிப்போகிறோம்" என்பதன் அடிப்படையில் உள்ளது நாம் சுகம் பெற்றபிறகு அவரையே சேவிப்போம் என்பதன் பேரில் சுகம் பெறுகிறோம்"** என்பது ஒரு சரியான அர்த்தமுள்ள மொழிப்பெயர்ப்பு ஆகும். இதை விட்டுவிட்டு நாம் அவருக்கு ஊழியம் செய்வோம் என்ற அடிப்படையில் சுகம் பெறுகிறோம் என்பது வேதவாக்கியங்களில் அடிப்படையில் இல்லை. இக்காலத்திற்குரிய செய்தி போலிகளின் கரங்களில் படும் பாட்டை கேட்டு, அறிந்து, படித்து அனுதினமும் என் இருதயத்தில் வாதிக்கப்படுகிறேன். பக்கம் 36, பத்தி 93 லும் இதே தவறைத்தான் செய்திருக்கிறார்கள்.

44. அடுத்து பக்கம் 36 ல் பத்தி 90 க்கு வந்தேன். ஆங்கிலத்தில் இது பத்தி 104. இங்கு Super duper faith என்பதை **மேம்பட்ட ஏமாற்று விசுவாசம்** எனமொழிப்பெயர்த்துள்ளார்கள். ஏமாற்று விசுவாசம் மேம்பட்டதாக இருக்கமுடியாது. **அது மிகைப்படியான ஏமாற்று வித்தை விசுவாசம்** ஆகும்.

45. இந்த பிரன்காம் கிறிஸ்து காரர்கள், பிரன்காம் பிரன்காம் என கூறிக்கொண்டு, தேவனுக்குரிய மகிமையை மறைமுகமாக சகோ.பிரன்காமுக்கு கொடுத்துவரும் வஞ்சகர்கள். செய்திக்கு தங்கள் சுயவியாக்கியானம் செய்யும் போலிகளே, செய்திகளை கொண்டு தங்களது பற்பல கோட்பாடுகளை (Ism) உள்ளே நுழைக்கும் கள்ளகபடமுள்ள வேலையாட்களின் கரங்களில் செய்தி சென்று, அவர்கள் மக்களது விசுவாசத்தை திசை திருப்பி வருவதை அறிகிறேன். உண்மையான விசுவாசிகள் என் எச்சரிப்பை ஏற்று தங்களை காத்துக்கொள்வார்கள் என நம்புகிறேன். ஆக செய்தியை முடிக்கபோகிறேன் என்ற உறுதியுடன் மேலும் படிக்க தொடர்ந்தேன். பத்தி 99 க்கு வந்தவுடன் (ஆங்கிலத்தில் 111) மீண்டும் கடிகாரமுள் நகரவில்லை. And I've expressed, Lord, - I believe, Your opinion, to them என உள்ளது. இதை **"கர்த்தாவே, நான் இதை வெளிப்படுத்தினேன், கர்த்தாவே அவர்களுக்காக உம்முடைய கருத்தை நான் விசுவாசிக்கிறேன்"** என உள்ளது. இங்கு சகோ பிரன்காம் எதை வெளிப்படுத்தினார்? கர்த்தருடைய எந்த கருத்தை அவர் விசுவாசித்தார்? இவர்களுடைய மொழிபெயர்ப்பில் ஏதாவது தெளிவு இருக்கிறதா? குருடர்களுக்கு குருடர் வழிகாட்டும் நிலைதான் இருக்கிறது. மேலும் **"கர்த்தாவே நான் வெளிப்படையாக கூறினேன். அது அவர்களுக்கு உம்முடைய ஆலோசனையாகும் என நான் விசுவாசிக்கிறேன்"** என்றால் அதில் அர்த்தம் உண்டு அல்லவா.

46. இங்கு மற்றொரு காரியத்தையும் எழுத விரும்புகிறேன். 10.02.2013 அன்று இரவு சுமார் 7.00 மணியளவில் நாங்கள் ஒருவரையொருவர் நேரில் சந்திக்காவிட்டாலும் **இயேசு வாரும்** இதழ் மூலமாக என்னை அறிந்திருந்த ஒரு சகோதரி என்னோடு சுமார் 45 நிமிடங்கள் செல் போனில் பேசினார்கள். தங்கள் சபையின் போதகர் பிரசங்கித்து வரும் தவறான போதனைகளை குறித்து மிக்க பாரப்பட்டார்கள். இது குறித்து ஜெபிக்கும்போது கர்த்தர் என்னிடம் (காலேப் யோசுவா) ஆலோசனை கேட்க வழிநடத்தினார் என்றார்கள். அவர்களது பாஸ்டர் போதனை தவறானது தான் என்பதை நானும் அவர்களுக்கு தெளிவுபடுத்தினேன். ஒன்று சகோ பிரன்காம் காலில் அப். யோவான் விழுந்தான் (வெளி 19 : 10, 22 : 8,9) என்பது, இரண்டாவது பரிசுத்த வேதாகமம் மறைபொருளை கொண்ட புத்தகம், ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு தேவனுடைய வெளிப்பாடுகளை கொண்ட புத்தகம். ஆதலால் இனி ஏழுமுத்திரைகளின் வெளிப்பாடு புத்தகத்தையே தியானிக்கவேண்டும் என்பதாகும். பாருங்கள் இந்த இரு உபதேசங்களும் பிசாசினுடையதே. உங்கள் பாஸ்டர் பிசாசினால் விழிநடத்தப்பட்டு ஜனங்களை வஞ்சித்து வருகிறார். அவர் சபையை விட்டு வெளியேறுங்கள் என அந்த சகோதரிக்கு ஆலோசனை கூறினேன். அடுத்து அந்த சகோதரி சபையில் மணவாட்டி ஊழியம் **காலத்திற்கு அப்பால்** என்ற செய்தி புத்தகம் அனைவருக்கும் கொடக்கப்பட்டதாகவும், தான் வாங்கி வந்து அதை தியானிக்கையில் அது தனது ஆத்துமாவிற்கு பிரயோஜனப்படவில்லை என்று கூறி அதை சபையில் திரும்ப ஒப்படைத்துவிட்டதாகவும் கூறினார்கள். இப்பொழுது மணவாட்டி ஊழியம் பற்றி நீங்கள் அறிந்து புரிந்துக்கொள்ளலாம்.

47. முடிவாக கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமானவர்களே, வேதவாக்கியங்களுக்கு மாறாக மணவாட்டி ஊழியம் என்ற பெயரை வைத்துக்கொண்டு, செய்தி மொழிப்பெயர்ப்புகளால் மக்கள் விசுவாசத்தை சேதப்படுத்திவரும் இவர்களது மொழிப்பெயர்ப்பை ஆதரிக்காதீர்கள். இவர்கள் இந்த பணிக்கென்று கர்த்தரால் நியமிக்கப்பட்டவர்கள் அல்ல. **மணவாட்டி ஊழியம்** மற்றும் **இயேசு கிறிஸ்துவின் ஜெபவீடு** தேவசித்தத்தின்படி அவருக்கென்று ஒரு ஊழியம் செய்கிறோம் எனகூறிக்கொண்டு இக்காலத்திற்குரிய செய்தியை கறைப்படுத்திவருகிறார்கள். இவர்கள் உங்களை மோசம் போக்கவொட்டாதிருங்கள் இவர்களை விட்டு விலகி உங்களை காத்துக்கொள்ளுங்கள். உங்கள் பணம் சத்தியத்தை சீர்குலைக்கும் சாத்தானுடைய பணிக்கே செலவிடப்படுகிறது என்பதை மறந்துவிடாதீர்கள்.

48. சமாதானத்தின் தேவன் உங்கள் அனைவரோடும் கூட இருப்பாராக, ஆமென்.

கிறிஸ்துவின் அன்பில்
**சகோ. காலேப் யோசுவா**